மலர் 7 • இதழ் 12 • ஏப்ரல் 2023 • ரூ.20/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி



## வாயுத் தொல்லை வராமல் தடுக்கலாம்!

## வேண்டும் எமோஷனல் இன்டலிஜென்ஸ்!

## கற்றுக்கொள்ள நேரம் ஒதுக்குங்கள்!

# மரம் வளர்ப்போம்
# மழை பெறுவோம்




சமுதாய நலன் கருதி வெளியிடுவோர்



**சக்தி ®**

**மசாலா**



**சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்**

6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.

போன் : 0424 - 2533601.

E-mail : headoffice@sakthimasala.co.in

www.sakthimasala.com

• **சக்தி** மசாலா சமையல் பொடி வகைகள் • **சக்தி** ஊறுகாய் வகைகள் • **சக்தி** சன் பிளவர் ஆயில் • **சக்தி** பருப்பு வகைகள்
• **சக்தி** பஜ்ஜி போண்டா மாவு • **சக்தி** ராகி மாவு • **சக்தி** கடலை மாவு • **சக்தி** அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






**COURSES AVAILABLE**

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

- 100% PLACEMENT OPPORTUNITY
- ADMIRABLE INFRASTRUCTURE
- WORLD CLASS ACADEMIC AMBIENCE
- EMINENT FACULTY

## SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial | App Store | Google play | www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

ஐ.ஐ.டி., மற்றும் ஐ.ஐ.எம்., போன்ற இந்தியாவின் மிக முக்கியமான உயர்கல்வி நிறுவனங்களில் அறிவுசார்ந்த முதலீடு நிறைய இருக்கிறது. ஆனால், பெரும்பாலான இடங்களில் கட்டமைப்புகளுக்குத்தான் பஞ்சம். இதனால் தரமான கல்வியைத் தருவதற்கு இயலாத சூழ்நிலை. ஆராய்ச்சிகளுக்கும் போதுமான ஆதரவு கிடைப்பதில்லை. இதனால் உலகின் உயரிய கல்வி நிறுவனங்களுடன் போட்டியிடும் இடத்துக்கு நாம் செல்ல முடியவில்லை. உலக அளவில் டாப் 100 உயர்கல்வி நிறுவனங்களைப் பட்டியலிடும்போது, அதில் இந்திய நிறுவனங்களுக்கு இடம் இருப்பதில்லை. இந்திய உயர்கல்விச் சூழலில் இருக்கும் கல்வியாளர்கள் பலருக்கும் மனச்சோர்வை ஏற்படுத்தும் விஷயம் இது.

கட்டமைப்பு வசதிகளைச் செய்யாமலும் ஆராய்ச்சிகளுக்கான சூழலை ஏற்படுத்தாமலும் இந்த நிலையை மாற்ற முடியாது. இதற்குப் பெரும் முதலீடு தேவை. இதை உணர்ந்துதான் உயர்கல்வி நிதி முகமை (Higher Education Financing Agency –HEFA) என்ற அமைப்பு கடந்த 2016–17 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. 2017 மே மாதம் 31–ம் தேதி உயர்கல்வி நிதி முகமை முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது. மத்திய அரசின் கல்வி அமைச்சகம் 90.91% பங்களிப்பும், கனரா வங்கி 9.09% பங்களிப்பும் செய்து இந்த அமைப்பை ஆரம்பித்தன. 2022–ம் ஆண்டுக்குள் இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கு இதன்மூலம் ஒரு லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

# உயர்கல்விக்கு உதவ வேண்டும்!



இதன்படி ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., ஐ.ஐ.ஐ.டி., என்.ஐ.டி., ஐ.ஐ.எஸ்.சி., எய்ம்ஸ் போன்ற கல்வி நிறுவனங்கள் தங்கள் கல்விக் கட்டமைப்புகளை மேம்படுத்தவும், ஆராய்ச்சிகளுக்குத் தேவைப்படும் ஆய்வுக்கூடங்களை அமைக்கவும் இந்த உயர்கல்வி நிதி முகமையிடம் கடன் பெறலாம். இதுதவிர பெருநிறுவனங்களின் சி.எஸ்.ஆர் நிதியை கல்வி நிறுவனங்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் பணியையும் இந்த அமைப்பே செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டது. உயர்கல்வி நிறுவனங்களைத் தாண்டி, பள்ளிக்கல்விக்கும் இந்த அமைப்பே கடன் உதவி செய்யலாம் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது.

2022–ம் ஆண்டுக்குள் இந்த அமைப்பு ஒரு லட்சம் கோடி ரூபாயைக் கடனாக வழங்கியதா? கல்விக்கான நாடாளுமன்ற நிலைக்குழு சமீபத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் அறிக்கை பெரும் ஏமாற்றத்தையே தருகிறது. 2022 டிசம்பர் 31 வரை ரூ.46,700.03 கோடி அளவிலான கடனுதவிக்கான திட்டங்கள் மட்டுமே ஏற்கப்பட்டுள்ளன. அவற்றில் ரூ.35,253.18 கோடி ரூபாய் கடனுக்கு மட்டுமே ஒப்புதல் தரப்பட்டது. அதிலும் ரூ.16,013.79 வரை மட்டுமே கடன்கள் உண்மையில் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

இது மிகவும் வேதனை தருவதாக இருக்கிறது. இந்திய உயர்கல்வி நிறுவனங்களை வெளிநாடுகளில் வளாகங்கள் திறக்கும் அளவுக்கு மாற்றப்போவதாக அறிவிப்புகள் வருகின்றன. ஆனால், அடித்தளத்தை வலுவாக்கும் விஷயத்தில் தொடர்ந்து பின்தங்குகிறோம். அரசின் கல்வி நிறுவனங்களுக்கு அரசாங்கம் உருவாக்கிய ஒரு நிதி முகமையிலிருந்து கடன்கள் செல்வதே கடினமான விஷயமாக இருப்பது, உயர்கல்வி மேம்பாட்டுக்கு எந்த வகையிலும் உதவாது.

இந்த உயர்கல்வி நிதி முகமைக்கு கடந்த நிதியாண்டில் ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அதுகூட இல்லை. இதன்மூலம் தானே நிதி திரட்டிக்கொள்ள வேண்டிய சூழலுக்கு அந்த நிறுவனம் தள்ளப்பட்டிருக்கிறது.

உயர்கல்வி நிறுவனங்களில் செய்யப்படும் ஆய்வுகளே ஒரு தேசத்தை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்வரிசையில் நிறுத்துகிறது. சீனா, தென் கொரியா போன்ற ஆசிய தேசங்கள் அப்படித்தான் வளர்ச்சி பெற்றன. அதன்மூலம் பொருளாதார வலிமையும் அடைந்தன. இந்தியாவில் எளிய குடும்பத்தில் பிறந்தவர்களுக்குக்கூட உயர்கல்வி ஆராய்ச்சி வாய்ப்பை வழங்கும் அளவுக்கு அரசின் கல்வி நிறுவனங்கள் மேன்மை பெற வேண்டும். அதுதான் நம் தேசத்தையும் ஒவ்வொரு குடும்பத்தையும் பொருளாதார வலிமை பெறவைக்கும்.

அன்புடன்,
**சூர்யா**
நிறுவனர் – அகரம் பவுண்டேஷன்


AGARAM FOUNDATION
**யாதும்**
நமது கல்வி - நமது குழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்
மலர் 7 • இதழ் 12
ஏப்ரல் 2023

கௌரவ ஆசிரியர்
**திரு.சூர்யா**

பதிப்பாளர் – ஆசிரியர்
**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்
**வள்ளி**

வடிவமைப்பு
**கே.உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com



# அப்படியா..?

பார்த்ததும் படித்ததும் 11

கல்விச் சிந்தனைகள்

பல நாடுகளில் நடுத்தர வர்க்கப் பெற்றோர்களுடன் நடந்த உரையாடல்களில், பெற்றோர் பலர் தங்கள் பிள்ளைகள் குறித்து தெரிவித்த கருத்துகளில் சில:

- வீட்டிலும் பள்ளியிலும் நல்ல பேர் எடுக்கணும்.
- பிரியமா இருப்பேன்; அதே நேரம் கண்டிப்பாகவும் இருப்பேன்.
- கேட்டதெல்லாம் வாங்கித் தர்றோம்... அதுக்குக் கொஞ்சம் நன்றியோடு பிள்ளை நடக்கணும்ல?
- நல்லாப் படிச்சு நல்ல வேலைக்குப் போகணும்.
- பொய் சொல்லக்கூடாது. அது எனக்குப் பிடிக்காது.
- சாமான்களை எடுத்த இடத்தில் வைக்கணும்; இல்லாட்டி எனக்குக் கெட்ட கோபம் வரும்.
- தெரியாம மறைச்சு மறைச்சு செய்றான். எதுக்கு இந்தக் கள்ளத்தனம்?

போதும், மூச்சு முட்டுகிறது. எதிர்பார்ப்புகளால் கட்டப்பட்டது குடும்பம் என்பதை நாம் அறிவோம். பிள்ளைகள் மீது விழும் அழுத்தமும் குடும்பத்திலிருந்தே தொடங்குகிறது. எதிர்பார்ப்பு சரியும்போது, பிள்ளைகளின் நடத்தை பற்றிப் பேசும்போது, பெற்றோர் பெரும் ஒழுக்கசீலர்களாக மாறி விடுவதையும் பார்க்கிறோம். வேடிக்கையான நாடகம். சரி, பள்ளிக்கூடம் மட்டும் விதிவிலக்கா என்ன?

மந்தைத்தனம்தான் பொதுவான நடைமுறை. விதிவிலக்குகள் அபூர்வம். விதிவிலக்குகளைப் புரிந்துகொள்வதும் கடினம். விதிவிலக்குகள் தாக்குப் பிடித்து நிற்பதும் கடினம். கும்பலில் இருந்து விலகித் தன்னந்தனியாய் நிற்பதற்கும், தொடர்ந்து நடப்பதற்கும் தைரியம் வேண்டும்.

விதிகளும் அழுத்தமும் கொண்டதுதான் நாம் அன்றாடம் காணும் பள்ளி. சுதந்திரப் பள்ளி (Free School) என்பது யதார்த்தத்தில் இருந்து விலகிய கருத்தாக்கம். நம் நீண்ட நாள் கனவு அது. சுதந்திரப் பள்ளிகளுக்கு நெடிய வரலாறு உண்டு. அப்பள்ளிகள் நீண்ட நாள் நிலைத்திருக்கவில்லை என்பது வரலாற்றின் ஒரு பகுதி. ஆல்காட், டால்ஸ்டாய் என சுதந்திரப் பள்ளியை உருவாக்கப் பெரும் பாடுபட்டோர் பலர்.


1921–ல் இங்கிலாந்தில் தொடங்கப்பட்டு, போராடிப் போராடி இன்று வரை நிலைத்திருக்கும்

பேராசிரியர் ச.மாடசாமி

சுதந்திரப் பள்ளி Summerhill School. இப்பள்ளியை உருவாக்கியவர் A.S.Neill. இப்பள்ளி குறித்து ஒரு வரியில் சொல்வதானால், இது மகிழ்ச்சிக்கான பாதை!

ஒரு பள்ளிக்குள் இரண்டு வித அதிகாரங்கள் இருக்கின்றன. ஒன்று, வெளிப்படையான அதிகாரம். அது தண்டனை வடிவில் வந்து பயமுறுத்துகிறது. மற்றொன்று, முகமற்ற அதிகாரம். மறைவான அதிகாரம். அது, ஒழுக்கம், எதிர்காலம் என்று உபதேசங்களைக் கொட்டிப் பயமுறுத்துகிறது.

Summerhill அதிகாரமற்ற பள்ளி. பயமும் தோன்றாத பள்ளி. பாசாங்கிற்கும் அப்பள்ளியில் இடமில்லை. குழந்தைகளைத் தங்கள் சுயத்துடன் இருக்க அனுமதிக்கும் பள்ளி. நீலின் வார்த்தைகளில் சொல்வதானால்,The function of the child is to live his own life. புத்திசாலிகள் எனத் தம்மை நினைத்துக்கொண்டோரின் குறுக்கீடுகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் இடம்தராத பள்ளி. ஒவ்வொரு குழந்தையையும் நம்பும் பள்ளி அது. A child is innately wise and realistic எனச் சொல்லும் பள்ளி.




பள்ளி தந்த கல்வியிலும் சரி, பள்ளியின் நிர்வாகத்திலும் சரி, குழந்தைகளின் விருப்பமும் ஒப்புதலுமே முதன்மையாக இருந்தன. 'படி' என்று யாரும் சொன்னதில்லை. 'வகுப்புக்கு வா' என்று யாரும் அழைத்ததில்லை. ஆனால் குழந்தைகள் வகுப்பை விரும்பினர்.

டேவிட் தன் ஒன்பது வயதில் கக்குவான் இருமல் காரணமாக வகுப்புக்குச் செல்லவில்லை. வகுப்பின் சந்தோஷத்தை இழப்பதாகச் சொல்லி அவன் கதறி அழுதான். டேவிட் பின்னாளில் லண்டன் பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியர் ஆனான்.

நீலின் மலைப் பள்ளியில் சுதந்திரம் (freedom) இருந்தது; ஆனால் இஷ்டப்படி நடக்கும் போக்கு (license) இல்லை. விதிகள் சில இருந்தன. விதிகளை நிர்வாகம் உருவாக்கவில்லை. பள்ளி மாணவர்களே வாக்கெடுப்பின் மூலம் உருவாக்கினார்கள். நீலின் வாக்குக்கும் 7 வயதுக் குழந்தையின் வாக்குக்கும் ஒரே மதிப்புதான், வித்தியாசமில்லை. In Summerhill everyone has equal rights என்கிறார் நீல். 'கடலில் பாதுகாப்பாளர் இன்றி பள்ளிப் பிள்ளைகள் குளிக்கச் செல்லக் கூடாது' என்பது வாக்கெடுப்பில் உருவான விதிகளில் ஒன்று.

இந்தப் பள்ளி குறித்து ஏராளமான நூல்கள் வந்துள்ளன. விமர்சனங்களுக்கும் பஞ்சமில்லை. 'பைத்தியக்காரக் கும்பல்' என்பது பரிகாசங்களில் ஒன்று. பரிகாசங்களைத் தாண்டாமல் பரிசோதனை ஏது?

பள்ளியை உருவாக்கிய A.S.நீல் அவர்களே எழுதிய புத்தகம், Summerhill. வாசிக்கவும் உரையாடவும் மிகச் சிறந்த புத்தகம்; உண்மை அடர்ந்த அனுபவம்!

**மா**ணவர்கள் ஆசிரியர்களுக்குச் சூட்டும் பட்டப் பெயர்களில் கற்பனையும் இருக்கும்; நகைச்சுவையும் இருக்கும். 'சொடக்கு சார் வந்துட்டாரா?' என்று பெஞ்ச் தோழன் பொன்னையா கேட்பான். அவன் சொல்வது ஆங்கில ஆசிரியர் சுந்தரத்தை! வகுப்பில் அடிக்கடி விரல்களை முறித்துச் சொடக்குப் போட்டுக்கொண்டே இருப்பார். அதனால் அவருக்கு அந்தப் பெயர்!

'அப்படியா சார்', மாணவர்கள் மத்தியில் வெகு பிரபலம். நிஜப் பெயர் அம்ஜத். ஆசிரியர் யாரும் லீவு போட்டுவிட்டால் அம்ஜத்தைக் கூப்பிட்டுச் சொல்வார் தலைமை ஆசிரியர். 'அப்படியா' என்று கேட்டு அந்த வகுப்பில் போய் நிற்பார் அம்ஜத். வகுப்புக்கு லேட்டாக வருவான் ஒச்சப்பன். அம்ஜத் சாரிடம் கூசாமல் பொய் சொல்வான். 'அம்மாவுக்குக் காய்ச்சல் சார்!' கோபிக்கமாட்டார் அம்ஜத். 'அப்படியா?' என்று கேட்டு வகுப்புக்குள் அனுமதிப்பார்.

சியாமளா வேகமாய் வாசிப்பவள். 'பாடையில் தென்னை மரம்' என்று வாசித்தாள். அம்ஜத் சார் முகம் சுளிக்கவில்லை. 'அப்படியா? நான் பாதைன்னுல நெனச்சேன்' என்றார். வகுப்பு கைகொட்டிச் சிரித்தது. சியாமளாவும் சிரித்துவிட்டாள்.

ஒரு நாள் வகுப்பு முழுக்க 'அப்படியா... அப்படியா...' என்று பேச்சு. விவரம் கேட்டால் ஜான்சன் சொன்னான். 'நம்ம அப்படியா சார் டிரான்ஸ்பராம். வேற பள்ளிக்கூடம் போறாராம்.'

வகுப்பு பூராவும் 'அப்படியா... அப்படியா..?' மாணவர்கள் சொன்ன 'அப்படியா'வில் ஆச்சர்யம் மட்டும் இல்லை, வருத்தமும் இருந்தது.

**(தொடர்ந்து பேசுவோம்...)**



# கற்றுக்கொள்ள நேரம் ஒதுக்குங்கள்!

❖ உலகிலேயே சக்தி வாய்ந்த மனிதர், உலகிலேயே அதிக வேலைப்பளு உள்ள தலைவர் என அமெரிக்க அதிபரைச் சொல்வார்கள். அவ்வளவு பரபரப்பான பதவியில் இருந்த நேரத்திலும், தினமும் ஒரு மணி நேரம் படிப்பதை பராக் ஒபாமா வழக்கமாக வைத்திருந்தார்.

❖ உலகின் நம்பர் 1 பணக்காரர் பில் கேட்ஸ். மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தை உருவாக்கிய கடினமான நேரத்திலும், வாரத்துக்கு ஒரு புதிய புத்தகம் படிப்பதை அவர் வழக்கமாக வைத்திருந்தார். ஆண்டுக்கு ஒருமுறை இரண்டு வாரங்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு, தனியாக அமர்ந்து அந்த 14 நாட்களும் புத்தகங்கள் படிக்கிறார்.

❖ உலகின் மிகச்சிறந்த முதலீட்டு நிபுணர், வாரன் பஃபெட். ஒவ்வொரு நிமிடத்திலும் அவரது முதலீடு வளர்ந்துகொண்டே போகிறது. ஆனால், எல்லா நேரமும் அவர் பணத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தன் வாழ்நாளில் 80 சதவிகித நேரத்தை அவர் படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் செலவிடுகிறார்.

❖ படிப்பதைப் போலவே சிந்திப்பதும் முக்கியம். புகழ்பெற்ற லிங்க்டுஇன் நிறுவனத்தின் தலைவர் ஜெஃப் வெய்னர், தினமும் இரண்டு மணி நேரத்தைச் சிந்திப்பதற்காக ஒதுக்குகிறார். ஏ.ஓ.எல் நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் இருப்பவர்கள், வாரத்தில் நான்கு மணி நேரம் சிந்திப்பதற்காக ஒதுக்குகிறார்கள்.



'எனக்கு நேரமில்லை, நான் ரொம்ப பிஸி' என காலில் சக்கரம் கட்டாத குறையாக ஓடிக்கொண்டிருக்கும் பலரும் கவனிக்க வேண்டிய தகவல்கள் இவை. உலகத்தின் பிஸியான மனிதர்கள் பலரும், தங்கள் பணிகளுக்கு இடையே குறைந்தது ஒரு மணி நேரமாவது, புதிதாக எதையேனும் கற்றுக்கொள்ள ஒதுக்குகிறார்கள். 'வாரத்தில் ஐந்து மணி நேரம் கற்றலுக்கான நேரம்' என்பது புதிய நிர்வாகவியல் விதி.

பலரும் தங்கள் வாழ்க்கை முழுக்கப் பணத்தை வெறித்தனமாகச் சம்பாதிக்கிறார்கள், சேமிக்கிறார்கள், முதலீடு செய்கிறார்கள், செலவழிக்கிறார்கள். 'இதற்கு நடுவே வேறு எதற்கும் நேரமில்லை' என்கிறார்கள். ஆனால், பணத்தைவிட முக்கியமானது அறிவு. ஏனெனில், மனித இனத்தின் அறிவால் உருவாக்கப்படும் தொழில்நுட்பங்கள், பணத்தின் மதிப்பை ஒன்றுமில்லாமல் செய்து கொண்டிருக்கின்றன.

யோசித்துப் பாருங்கள்... ஒரு காலத்தில் பாடல்கள் கேட்க இசைத்தட்டு வாங்கினார்கள், ரேடியோ வாங்கினார்கள், டேப் ரெக்கார்டரும் கேஸட்டும் வாங்கினார்கள், சி.டி பிளேயர் வாங்கினார்கள். இப்போது நம் ஸ்மார்ட் போனில் எப்போது வேண்டுமானாலும் பாடல்கள் கேட்கலாம். மற்ற அத்தனை பொருட்களும் மதிப்பிழந்து போய்விட்டன. இப்படி ஒரு காலத்தில் மதிப்புள்ள பொருளாக இருந்தவை பலவும் இன்று இலவசமாக ஆகிவிட்டன.

இன்று நிறைய பணம் கொடுத்து நாம் வாங்கும் பல பொருட்களும் சேவைகளும், எதிர்காலத்தில் இலவசமாகவே கிடைக்கக்கூடும்.

இப்படி உலகம் மாற மாற... பணத்தின் மதிப்பு குறைந்துகொண்டே போகிறது. ஆனால், அறிவின் மதிப்பு உயர்ந்துகொண்டே போகிறது. 'தங்கள் அறிவுக்காக முதலீடு செய்பவர்கள், மிகச் சிறந்த வட்டியைப் பெறுவார்கள்' என பெஞ்சமின் ஃபிராங்க்ளின் சொன்னார். இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் மிகவும் மதிப்புமிக்க கரன்சி, எல்லா நாடுகளிலும் செல்லுபடி ஆகிற கரன்சி, 'அறிவு'தான்.

முன்பெல்லாம் 'கஷ்டப்பட்டு உழைப்பவர்கள்தான் முன்னுக்கு வர முடியும்' என்பார்கள். இப்போது, 'புத்திசாலித்தனமாக உழைத்தால்தான் முன்னுக்கு வர முடியும்' என்று சொல்கிறார்கள். புத்திசாலித்தனம் இல்லாத கடின உழைப்புக்குப் பலன் கிடைப்பதில்லை.

நம் கண்ணெதிரே இதைப் பார்க்கலாம். முன்பெல்லாம் ஒரு சாலை போடும் பணியில் நூற்றுக்கணக்கான மனிதர்கள், தங்கள் கால்களில் பழைய சாக்குப்பைகளைக் கட்டிக்கொண்டு ஈடுபடுவார்கள். ஒரே ஒரு ரோடு ரோலர் இயந்திரம் மட்டும் இயங்கும். இப்போதோ கற்களையும் தாரையும் கலக்க ஓர் இயந்திரம், அந்தக் கலவையைச் சாலையில் சீராகப் பரப்ப ஓர் இயந்திரம், அதைச் சாலையில் அழுத்தி நேர்த்தி செய்ய ஓர் இயந்திரம் என எல்லாவற்றுக்கும் இயந்திரங்கள் வந்துவிட்டன. நான்கைந்து மனிதர்களுக்கு மேல் அங்கு யாருக்கும் வேலையில்லை. செயற்கை நுண்ணறிவு வந்த பிறகு, பல மணி நேர வேலைகள் நொடியில் முடிந்துவிடுகின்றன. இப்படி மனிதர்களால் செய்யப்பட்ட பல பணிகளைச் செய்ய இப்போது இயந்திரங்களும் தொழில்நுட்பங்களும் வந்தாயிற்று! ஆனால், நுணுக்கமான திறமையும், பெரிய அளவில் மூளை உழைப்பும் தேவைப்படும் பணிகளை மட்டும் இப்போதும் மனிதர்களே செய்கிறார்கள்.

'எந்த ஒரு துறையிலும் தலைசிறந்த நிபுணர் ஆவதற்கு சுமார் 10 ஆயிரம் மணி நேர கற்றலும் பயிற்சியும் தேவை' என்கிறார்கள் ஆய்வாளர்கள். அப்படிக் கற்றுக்கொண்டு அறிவைப் பெருக்கினால் போதும், அது உங்களுக்குப் பணத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும். செலவழித்தால் பணம் குறையும்; ஆனால், அடுத்தவர்களுக்குப் பகிரும்போது அறிவு வளர்கிறது.

'கல்லூரி முடிக்கும் வரையே கற்றுக்கொள்ளும் பருவம்' எனப் பலரும் நினைக்கிறார்கள். அதன்பின் வேலைக்குப் போனதும் கற்றலை மறக்கிறார்கள். ஆனால், அது வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும். அதைக் கீழ்க்காணும் வழிகளில் சாமர்த்தியமாகச் செய்ய வேண்டும்...

❖ காலத்துக்குப் பொருந்தாத விஷயங்களில் நேரத்தை விரயம் செய்யாதீர்கள். நாம் இருக்கும் துறையில், இந்த நேரத்தில், எப்படிப்பட்ட திறமைக்கு மதிப்பு கிடைக்கும் என உணர்ந்து கற்றுக்கொள்ளுங்கள்.



❖ எல்லாவற்றையும் பற்றி அடிப்படையாகத் தெரிந்து வைத்திருங்கள். அப்போதுதான் எதைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தாலும், உங்களுக்கு அது பற்றிக் கொஞ்சமாவது முன்கூட்டியே தெரிந்திருக்கும் என்பதால், சீக்கிரம் கற்க முடியும்.

❖ உங்கள் துறையில் உங்களைப் போலவே இருக்கும் மற்றவர்களைவிடக் கூடுதலாக அறிந்துகொண்டு திறமை பெறுங்கள். அதுவே உங்களை வித்தியாசப்படுத்திக் காட்டும்.

❖ மற்றவர்களைவிட அதிக திறமையும் அறிவும் உங்களுக்கு இருக்கிறது என்பதை, நீங்கள் பணிபுரியும் இடத்தில் உணர்த்துங்கள். அப்படி உணர்த்தினால்தான், உங்களுக்கு வாய்ப்பு வரும்.

❖ நீங்கள் கற்றுக்கொண்டதை உங்கள் பணியில் வெளிப்படுத்துங்கள். அதன்மூலம் மாற்றங்களை ஏற்படுத்துங்கள். அப்போதுதான் உங்களின் அறிவு உங்களுக்கு சம்பாதித்துக் கொடுக்க ஆரம்பிக்கும். ●



# வேண்டும் எமோஷனல் இன்டலிஜென்ஸ்!

அன்பு, பாசம், மகிழ்ச்சி, கோபம், குரோதம், வெறுப்பு என்று பலவிதமான உணர்வுகளின் தொகுப்பே மனிதர்கள். எந்த நேரத்தில் எந்த உணர்வில் இருப்பார்கள் என்பது அறிய முடியாத ஒன்று. குழுவாக இணைந்து பணியாற்றும் இடங்களில், இந்த உணர்வுகளைக் கையாளத் தெரிந்தவர்கள் மட்டுமே பெரிய உயரங்களை எட்ட முடியும். அவர்களே தலைமைப் பதவிகளை அலங்கரிக்கின்றனர். வேலையிடத்தில் பின்பற்ற வேண்டிய எமோஷனல் இன்டலிஜென்ஸ் உத்திகள் பற்றி விரிவாகப் பகிர்ந்துகொள்கிறார், ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் கல்வியாளர் நஞ்சுண்டேஸ்வரன்.

நமது உணர்ச்சிகளால்தான் நம் வாழ்க்கை அழகாகும். இந்த உணர்வுகள் மாறி மாறி நமது எண்ணங்களையும் வாழ்க்கையையும் சுவாரசியமானதாக மாற்றும். எந்த இடத்தில் எந்தளவுக்கு உணர்வுகளைப் பயன்படுத்தலாம் என்று தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதனை உணர்ச்சிகளைக் கையாளத் தெரிந்த அறிவாகப் பார்க்கிறோம். நிறுவனங்கள் தங்களது பணியாளரிடம் இதனை எதிர்பார்க்கிறது. தேவைப்பட்ட நபரிடம் தேவைப்பட்ட அளவில் உணர்வுகளை



வெளிப்படுத்துபவரை எமோஷனல் இன்டலிஜென்ஸ் திறன் கொண்டவராக நிறுவனங்கள் கொண்டாடும். இப்படி இருக்க என்ன செய்ய வேண்டும்?

**உறவு பேணுதல்:** நிறுவனங்களில் சக மனிதர்களுடன் தொடர்புகொள்வதை கம்யூனிகேஷன் என்கிறோம். எளிதில் புரியும்படி சொல்ல வேண்டும். ஒருவருக்கு ஒருவர் புரிதலுடன் உள்ளார்ந்த நல்ல உறவைப் பேணுதலை இன்டர் பர்சனல் ரிலேஷன்ஷிப் என்கிறோம். உத்தரவுக்காகக் காத்திருக்காமல், பொறுப்பேற்றுக் கொண்டு வேலையில் இறங்குவது இனிஷியேட்டிவ். ஒரு நிறுவனத்தில் வெற்றிகரமாகப் பணியாற்ற இந்த மூன்று திறனும் அவசியம். ஒரு வேலையைப் பலர் கூடிச் செய்யும்போது, அறிவும் உணர்ச்சிகளும் பகிர்ந்துகொள்ளப்படும். உணர்ச்சிகளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளவர்களே மிகப்பெரிய வெற்றிகளைப் பெறுகின்றனர்.

**சிந்தனையை மாற்றலாம்:** கோபம் என்பதுஇயல்பானஉணர்வுதான்.என்னென்ன காரணங்களால் உங்களுக்குக் கோபம் வரும் என்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் அவமதிக்கப்படுவதாக உணரும்போது,

ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் இயக்குநர், கல்வியாளர்
**எஸ்.நஞ்சுண்டேஸ்வரன்**




மற்றவர் வேலையில் பொறுப்பற்று நடந்து கொள்ளும்போது, கோபம் உண்டாகிறது. கோபத்தைக் கட்டுப்படுத்தினால் அது வேறு விதத்தில் வெளிப்படும். அப்படியே வெளிப்படுத்தினால் அது விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். இந்தப் பாதிப்பை மனதில் கொண்டு நமது சிந்தனையை மாற்றிக்கொள்ளலாம். கோபத்தை வெளிப்படுத்தாமல், நாம் எதிர்பார்த்த ஒன்று நடக்க அந்த இடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்துச் செயலை மாற்றலாம். இது வெற்றியையே தரும்.

**உணர்ச்சி வேகத்தில் முடிவெடுக்க வேண்டாம்:** நம் வாழ்வில் நல்ல வாய்ப்புகளை அல்லது உறவுகளை இழப்பதற்கு உணர்ச்சி வேகத்தில் முடிவெடுப்பதே அடிப்படைக் காரணம். தோல்வியில் முடியும் திருமண உறவுகள், நண்பனுடனான பிரிவு என்று பலவற்றைச் சொல்லலாம். இவை எல்லாமே அறிவுப்பூர்வமாக யோசிக்காமல் உணர்ச்சிநிலையில் இருந்து எடுக்கப்பட்ட முடிவுகள். இந்த இடத்தில் நமக்கு என்ன தேவை, அதை அடைவதற்கான வழிகள் என்ன என்று பிராக்டிகலாக யோசிக்க ஒரு இடைவெளியை மனதுக்கு அளிக்க வேண்டும். மனம் உணர்வுகளின் கொந்தளிப்பாக இருக்கும் நேரத்தில் அமைதியாக இருந்துவிட்டு, யோசித்துப் பின்னர் முடிவெடுப்பது எப்போதும் சரியாக இருக்கும்.

**பய உணர்வை நீக்கலாம்:** பய உணர்வும் பல பிரச்னைகளுக்குக் காரணமாகிறது. வேலை இடத்தில் உள்ள அனைவருமே தனக்கு எதிராக சதி செய்வதாகச் சிலர் புலம்பிக் கொண்டிருப்பார்கள். இதனால் செய்யும் வேலையிலும் இவர்களால் முழுக் கவனம் செலுத்த முடியாது. தனது திறனை மேம்படுத்திக் கொள்வதற்கான கூடுதல் முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் பழைய புலம்பலை புதிய நபர்களிடம் தொடர்வதோடு தேங்கிய குட்டையைப் போலக் காலப்போக்கில் நிறுவனத்தின் விரும்பத்தகாதவர்கள் பட்டியலில் இடம் பிடிப்பார்கள். பய உணர்வு ஏற்படும்போதெல்லாம், தகுதியை மேம்படுத்திக்கொள்ளும் முயற்சியில் இறங்கலாம். இது எந்தச் சூழலிலும் ஒருவரின் தன்னம்பிக்கையைப் பாதுகாக்கும்.

**கூடு விட்டுக் கூடு பாயுங்கள்:** அவமானமோ, கோப உணர்வோ உண்டாகும்போது அது நமது கட்டுக்குள் அடங்குவதில்லை. மழைக்கு முன்பான வானம் போலக் கருத்து, புழுதி கிளப்பி என மனதுக்குள் மிகப்பெரிய கொந்தளிப்பே நடந்து கொண்டிருக்கும். அது கரையைக் கடக்கும் முன்பாகக் கடிவாளத்தை இழுத்துப் பிடிக்க வேண்டும். எதிராளி ஏன் உங்களை அவமானப்படுத்தவோ கோபப்படுத்தவோ முயன்றார் என்பதை அவரின் நிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள். இது உங்களுக்கு அவர் பக்கம் உள்ள நியாயத்தை அல்லது அவரது எதிர்பார்ப்பைப் புரிந்துகொள்ள உதவும். இதன் மூலம் எவ்வளவு பெரிய பிரச்னைக்கும் தீர்வுகள் வசப்படும்.

**விழிப்புடன் இருக்கலாம்:** எந்த உணர்வும் கட்டுப்படுத்த முடியாமல் உங்களைத் தாக்கும்போது அது உங்களுக்குள் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை விழிப்புடன் கவனிக்கலாம். அந்த உணர்வுகளை எவ்விதம் வெளிப்படுத்துகிறீர்கள் என்பதையும் கண்காணிக்கலாம். நீங்கள் எந்தெந்த உணர்வு நிலைகளால் அதிகம் பாதிக்கப்படுகிறீர்கள் என்பதைப் புரிந்துகொண்டு சரி செய்துகொள்ள முடியும்.

**இம்பல்ஸிவ் வேகத்தைக் குறைக்கலாம்:** எந்த ஒரு விஷயத்துக்கும் காத்திருக்க முடியாமல் உடனே செயல்படுவது இம்பல்ஸிவ் உணர்வு நிலையாகும். இவர்கள் எதையும் அந்த நிமிடத்திலேயே செய்து விடுவார்கள். மனம் அவர்களை உந்தித்தள்ளும். பொறுமை இல்லாமல் அதிரடியாகச் செயல்படும் இவர்களால் ஒரு விஷயத்தில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி வெற்றியடைய முடியாது. நமக்குள் உள்ள தேவையற்ற விஷயங்களைக் கண்டறிந்து நீக்க வேண்டும். சில உணர்வுகளை வராதபோதும் விரும்பி இழுப்பது, சிலவற்றைக் குறைப்பது, சில கோபங்களைத் தள்ளிப்போடுவது என வரிசை மாற்றி அமைப்பதன் மூலம் பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

**குணங்களால் உயருங்கள்:** குடும்பத்தில், சமூகத்தில், வேலையிடத்தில் உங்களைப் பற்றி மற்றவர்கள் மனதில் என்னவிதமான எண்ணங்களைச் சேமிக்கலாம் என்று விரும்புகிறீர்களோ அதுபோல உங்களைச் செதுக்குங்கள். நீங்கள் ஒருவரிடம் பழகும்போது, உங்களைப் பற்றிய எண்ணங்கள் அவருக்குள் விதைக்கப்படுகிறது. நல்ல எண்ணங்களைப் பார்த்துப் பார்த்து வெளிப்படுத்துவது உங்களைப் பக்குவப்படுத்தும். நீங்கள் யார் என்பதை நீங்களே வரையும் வாய்ப்பு இது. இந்தப் பிம்பம்தான் எல்லோர் மனதிலும் நீங்களாக வலம் வரப் போகிறது.

உணர்வு நிலைகளை மிகச்சரியாக வெளிப்படுத்தி எமோஷனல் இன்டலிஜென்டாக மாறுங்கள். அனைவராலும் கொண்டாடப்படும் உங்களை வெற்றி, தத்தெடுத்துக்கொள்ளும்.

**– யாழ் ஸ்ரீதேவி**

# கண்மூடித்தனமாக நம்பலாமா?

காய்கறிக் கடைக்குச் சென்று கொண்டிருந்தார்கள் அப்பாவும் மகளும். “அப்பா, நான் உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும்” என்றாள் மகள்.

“என்னது?”

‘‘என் ஃப்ரெண்ட் அன்னைக்கு வீட்டுக்கு வந்திருந்தால்ல, அவ ஒரு மூடநம்பிக்கையைச் சொன்னா. அவ அதை நம்புறாளாம்.”

“என்னது?”

“அதாவது, பல்லி வாலை மிதிச்சா நமக்குக் கெட்ட செய்தி வருமாம். அவ சொல்றா!”

“உண்மையாவா?”

‘‘ஆமா, அவளோட அம்மா பல்லி வாலை மிதிச்சிட்டாங்களாம். மிதிச்சிப் பத்து நிமிஷத்துல ஒரு போன் வந்துச்சாம். அவுங்க மாமா ஏதோ பண நஷ்டம்னு தற்கொலை செய்துக்கிட்டாங்களாம்...”

“அடப்பாவமே!”

‘‘பல்லி வாலை மிதிக்கிறதுக்கும் நம்ம வாழ்க்கைல தப்பா ஏதாவது நடக்கிறதுக்கும் சம்பந்தம் இல்லைதானே? அது மூடநம்பிக்கைதானே! அப்புறம் ஏன் இவ மாமாவுக்கு அப்படி நடந்துச்சு?”

மகள் கேட்ட கேள்விக்கு அப்பா பதில் சொன்னார். இந்தக் கேள்வி அப்படியே இருக்கட்டும்.

எதையும் கண்மூடித்தனமாக நம்பாமல், பரிசோதனை செய்து நிரூபித்த பிறகே நம்ப வேண்டும் என்று அறிவியல் சொல்கிறது. சோதித்தல் என்ற Experiment என்றால் என்ன? சிறுவயதில் அறிவியல் பாடத்தில் நிறைய சோதனைகளைப் படித்திருப்போம்.

துத்தநாகம் என்ற ஜிங்க்கையும் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தையும் கலந்தால் ஹைட்ரஜன் வாயு கிடைக்கும் என்ற சோதனையைப் படித்திருப்போம்.

$Zn + HCl = ZnCl_2 + H_2$.

இந்தச் சோதனையில்,

1. மலையளவு துத்தநாகம் மீது ஒரு துளி அமிலத்தை விட்டால் அங்கே ஹைட்ரஜன் வருமா? வராது.

2. கடலளவு அமிலத்தில் ஒரு கிராம் துத்தநாகத்தைப் போட்டால் அங்கே ஹைட்ரஜன் வருமா? வராது.

3. ஒரு எரிமலைக் குழம்பு வெப்பச் சூழ்நிலையில் இச்சோதனையை நடத்தினால் ஹைட்ரஜன் கிடைக்குமா? கிடைக்காது.

4. மிக மிக அதிக அழுத்தத்தில் இச்சோதனையை நடத்தினால் ஹைட்ரஜன் கிடைக்குமா? கிடைக்காது.



அப்படியானால் ஒரு சோதனையில் ஏராளமான புற விஷயங்களைக் கட்டுப்படுத்துகிறோம், வரையறுக்கிறோம். இன்ன வெப்பத்தில், இன்ன அழுத்தத்தில், இன்ன அளவில் பொருட்களைக் கலந்தால் அதிலிருந்து ஹைட்ரஜன் வாயுவை எடுக்கலாம் என்பதுதான் சோதனையின் முடிவாகும். அப்படிச் செய்யும்போதுதான் அந்தச் சோதனையின் முடிவு எப்போதும் சரியாக இருக்கும்.

பல்லி வாலை மிதித்தால் வாழ்க்கையில் கஷ்டம் வரும் என்பது ஒரு நிரூபிக்கப்படாத கருதுகோளாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதை நிரூபிக்கச் சோதனை செய்வோம். அதை எப்படிச் செய்ய வேண்டும்?

ஆரோக்கியமான நூறு பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கையில் பிரச்னை இல்லாதவர்களாக இருக்க வேண்டும். அனைவருக்கும் ஒரே அளவு பண வசதி இருக்க வேண்டும். அனைவரையும் ஒரே அறையில் வைத்திருக்க வேண்டும். அனைவருக்கும் ஆளுக்கொரு பல்லி வேண்டும்.

ஒவ்வொருவரும் பல்லியின் வாலை மிதித்துவிட்டு, அடுத்த இரண்டு நாட்கள் அவர்கள் அனைவரும் ஒரேவிதமான தனித்தனி அறைகளில் தங்கியிருக்க வேண்டும். அந்த நூறு பேருக்கும் என்ன செய்தி வருகிறது என்று காத்திருக்க வேண்டும். வருவது நல்ல செய்தியா, கெட்ட செய்தியா என்று குறிப்பெடுக்க வேண்டும். அந்தக் குறிப்புகளை ஆராய்ந்து, அதில் கெட்ட செய்தி அதிகமாக இருந்தால், பல்லி வாலை மிதித்தால் கெட்டது நடக்கும் என்பதை முதல் கட்டமாக ஒப்புக்கொள்ளலாம்.

கட்டுப்படுத்தாத External factors உள்ள பரிசோதனைகள் தவறான முடிவுகளைக் கொடுக்க கூடியவை. நாம் அப்படி ஒரு சோதனையைக்கூட முறைப்படி செய்வதில்லை. ஆனால், வெவ்வேறு காலக்கட்டங்களில் அவரவர் கேள்விப்பட்ட தோராயமான ஆராய்ச்சி முடிவுகளைத் தொகுத்துக்கொள்கிறோம்.

இப்போது பத்து பேர் கூடி 'பல்லி வாலை மிதித்தால் கெடுதல்' என்று விவாதிக்கிறார்கள் என்றால், பத்து பேரும் கொடுக்கும் குறிப்புகள் வெவ்வேறு காலக்கட்டமாக இருக்கும்.

1. ஆமா, என் பாட்டி பல்லி வாலை மிதிச்சிட்டு ரெண்டு நாளா முதுகுவலின்னு இருந்தாங்க!

2. என் அப்பா பல்லி வாலை மிதிச்சிட்டுப் போகும்போதுதான் அவரு சைக்கிள் பஞ்சராகி நான் சைக்கிள்ல இருந்து விழுந்தேன்.

3. ஆமா, இவன் வயித்துல இருக்கும்போது பல்லி வாலை மிதிச்சேன். அன்னைக்கு நைட்டு ஒரே வாந்தி.




இப்படி வெவ்வேறு மனிதர்கள் பேசிக்கொள்வார்கள். இந்த மூன்று குறிப்புகளுக்கும் இடையே குறைந்தது இருபது வருடங்களாவது இடைவெளி இருக்கும். ஆனால் மூன்றும் ஓரிடத்தில் ஒன்றாய்ப் பேசப்படும்போது அங்கே பல்லி வால் மூடநம்பிக்கை என்பது ஒரு நம்பிக்கையாக அறிவிக்கப்படக்கூடும். 'எதுக்கு ரிஸ்க், இதுக்கொரு பரிகாரம் செய்துவிடுவோம்' என்று படித்தவர்களே மூடநம்பிக்கைக்கு அடிபணிகிறார்கள்.

நாம், பரிசோதனை என்பதன் அறிவியல் நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் கேள்விப்படும் மூடநம்பிக்கைகளை, மத சம்பிரதாயங்களை, பரிகாரப் பயமுறுத்தல்களை அந்த Experiment கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். அதில் இருக்கும் ஏராளமான கட்டுப்படுத்த முடியாத புற விஷயங்களைக் கவனிக்க வேண்டும். சோதித்துப் பார்த்து, 'இது சரியல்ல, மூடநம்பிக்கை' என்ற முடிவை எடுக்க வேண்டும்.

"இப்படித்தான் நாம் மூடநம்பிக்கைக்கு எதிராக அறிவியல்பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். இதை உன் வகுப்பு மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் நீ சொல்லவும் வேண்டும்" என்றார் அப்பா.

"இதையெல்லாம் என் ஃப்ரெண்ட்ஸ் புரிஞ்சிப்பாங்களான்னு தெரியலையே" என்றாள் மகள்.

"புரியுற மாதிரி சொல்லு. கொஞ்சம் நேரம் எடுக்கும், ஆனா புரிஞ்சுப்பாங்க" என்று அப்பா சொல்ல, அப்பாவும் மகளும் சிரித்தார்கள். ●



# சமயோசிதம்!

சிறுவயதில் எங்கள் ஆச்சி அடிக்கடி சொல்லும் வாசகம் ஒன்று உண்டு, 'புத்திசாலியா இருந்து பொழச்சுக்கங்கடா தம்பி'. அதுதான் இன்றுவரை வாழ்க்கையில் பல தருணங்களில் உடன் வருகின்றது.

குறுக்குவழியில் எல்லாவற்றையும் தேட நினைப்பவர்கள் எப்போதும் தங்களின் அறிவுக்கும், மனசாட்சிக்கும் கருப்புத் திரையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம், இவை இரண்டையும் கொண்டிருப்பவர் ஒருபோதும் குறுக்கு வழியில் செல்லமாட்டார். ஒரு போதும் பிறர் நோவதைச் சகிக்கமாட்டார். எந்த நெருக்கடியிலும் அறிவுடையவன் தப்பிப் பிழைத்துக்கொள்வான். அவனது அறிவு அவனைக் காத்து நிற்கும். அதுதான் சமயோசிதம்.

தன்னை அச்சுறுத்தும் வலிமையுள்ளவனைச் சமயோசிதம் மூலம் எளியவர்கள் வென்ற நிகழ்ச்சிகள் ஏராளம் இருக்கின்றன. உண்மையில் சமயோசிதம் என்பது அனுபவத்தில் இருந்து பிறந்த வழிகாட்டுதல். நெருக்கடியில் இருந்து தப்பிக்க மனிதர்கள் சுயமாகக் கண்டறிந்த தீர்வுதான் அது.

எல்லாக் காலங்களிலும் தன்னிலும் வலியோரைப் புகழ்ந்து, அவர் மனதைக் குளிர்வித்து, அதன்மூலம் பலன் பெற்று வாழ்ந்திருக்கிறார்கள் மனிதர்கள். இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த காலத்திலேயே இப்படியெனில் மூவாயிரம் வருடங்களுக்கு முன்பு யோசித்துப் பாருங்களேன். ராஜாக்களை அண்டி வாழ்ந்த பெரும்பாலானவர்களுக்குத் தொழிலே அதுவென இருந்திருக்கும் அல்லவா?

சந்தர்ப்பவாதம் என்பது ஒருபோதும் சமயோசிதம் ஆகாது. ஆனால், அறிவில் சிறந்தவருக்கு ஒருபோதும் அந்தத் துயரம் நேர்வதில்லை. அவரது அறிவு அவரை எப்போதும் தலைநிமிர்த்தியே வைத்திருக்கும் என்பதில் மிகையில்லை.

'அறிவுடைமை என்பதன் பயன், அது தனக்கு மாத்திரம் பயன்படுவதாக இருக்கக்கூடாது, தன்னைச் சார்ந்த சுற்றத்தாருக்கும் மற்றோருக்கும் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது அறிவு எனக் கொள்ளப்படமாட்டாது' என்கிறார் திருவள்ளுவர்.

இதனை அவர்

**'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**

**தம்நோய்போல் போற்றாக் கடை'** என்று வலியுறுத்தி நிற்கின்றார். தன்னைப் போல மற்றவர்களையும் பாவிக்கின்றவர்களே உலகில் மிகச்சிறந்த அறிவுடையவர்களாக இருக்கமுடியும். அறிவுடையவர்களிடத்தில் இயல்பாக நல்ல விஷயங்களைச் சிந்திக்கவும் அவற்றை அடுத்தவர்க்கு எடுத்துச் சொல்லும் குணமும் இருக்கும். இயல்பாகவே அன்பும் அவர்களிடத்தில் குடியிருக்கும்.

மற்றொரு குறளில்,

**'அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**

## கதை உணர்த்தும் நீதி 11

## செந்தில் ஜெகன்நாதன்

என்னுடைய ரேனும் இலர்'

என்கிறார். இதன் விளக்கம்: அறிவுடையவர் தம்மிடம் வேறொன்றும் இல்லாமல் இருந்தாலும், அவர் எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

எது அறிவு என்பதற்கு இப்படித் திருக்குறளில் உள்ள அறிவுடைமை அதிகாரத்தை வாசித்து அறிக! சரி, இப்போது கதைக்கு வருவோம். அறிவு என்பது சமயோசிதமும் அல்லவா?

உடனுக்குடன் சிந்தித்து பகுத்து நோக்குபவருக்கே உரியது சமயோசிதம். எந்தக் கணமும் கூர்மையோடு இருக்கும் அறிவுடையோருக்கு அது கைவந்த கலை. அப்படியான கதாப்பாத்திரங்களாகக் கதைகளில் நான் படித்தவர்கள் தெனாலிராமன், பீர்பால், ராயர் அப்பாஜி. அதில் முதல் இருவரைப் பற்றி நிறைய வாசித்திருந்தாலும் சில வருடங்களுக்குப் பின்னர், அதாவது என்னுடைய எட்டாம் வகுப்பில் அப்பாஜியின் கதைகளைப் படித்தேன். அவரது அறிவுக்கூர்மையைச் சொல்லும் பல கதைகளில் இந்தக் கதை எனக்கு மிகவும் பிடித்த ஒன்று!

மகாராணி ஏதோ கோபத்தில் அப்பாஜியை மந்திரி பதவியிலிருந்து நீக்க விரும்பினார். திட்டபடி ஒரு சாஸ்திரம் அறிந்த பண்டிதனை வரவழைத்துத் தனது கணவரிடம், "அரசர்க்கரசே! அப்பாஜிக்குப் பதிலாக இந்த அறிஞனைப் பிரதம மந்திரியாக நியமித்தால் அதிக நன்மை பிறக்கும். இவர் சகல சாஸ்திரங்களையும் படித்துக் கரை கண்டவராதலால் அரச சபைக்கு மிகச்சிறந்தவராக விளங்குவார்'' என்றாள்.

ராயருக்கு அரசியின் நோக்கம் புரிந்தது என்றாலும் எதுவும் மறுப்பு சொல்லவில்லை. "ராணி, இருவரில் யார் வல்லவர் என்பதை நாளை அரச சபையில் பரீட்சித்துப் பார்ப்போம். வெல்பவருக்கே பிரதம மந்திரி பதவி" என்றார்.


மறுநாள் அரசவையில் ராயரும் மகாராணியும் கொலு வீற்றிருக்கும்போது மன்னர் ராயர் சபையோரைப் பார்த்து, ''நான் நேற்றிரவு அந்தப்புரத்தின் நிலா மாடத்தில் இருக்கும்போது ஒருவன் எனது மார்பில் காலால் எட்டி உதைத்து எனது முகத்தில் எச்சிலை உமிழ்ந்துவிட்டான். அவனை என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

உடனே மகாராணியால் சிபாரிசு செய்யப்பட்ட சாஸ்திர பண்டிதர் எழுந்து, ''உலகத்திலேயே ராஜாதிராஜனாக விளங்கும் தங்களை அலட்சியம் செய்து தங்கள் முகத்தில் எச்சிலை உமிழ்ந்த அவன் வாயில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும். தங்கள் மார்பில் எட்டி உதைத்த அவன் கால்களையும் வெட்டி எறிய வேண்டும்" என்றார்.

ராயர் அடுத்து அப்பாஜி பக்கம் பார்த்து, "நீ என்ன சொல்கிறாய்?" என்றார். அதற்கு அப்பாஜி, ''உங்களை எட்டி உதைத்த கால்களுக்குப் பொற்சலங்கையும், தண்டைக் கொலுசும் அணிவித்து, உங்கள் முகத்தில் எச்சில் உமிழ்ந்த வாயை முத்தமிட்டுக் கொஞ்ச வேண்டும். ஏனெனில் தங்களுடைய அந்தப்புரத்தின் நிலா மாடத்துக்கு வந்து தங்கள் வீர மார்பில் எட்டி உதைத்துத் தங்கள் திருமுகத்தில் எச்சிலை உமிழக் கூடியவன் தங்களுடைய பச்சிளம் பாலகனான இளவரசனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?" என்றார்.

ராயர் மனம் மகிழ்ந்து, ''அப்பாஜி, நீ சொல்வது சரிதான்'' என்றார். பின்பு மகாராணியின் பக்கம் திரும்பி, 'யார் அறிவில் வல்லவர் என்பதைப் பார்த்தாயா?' எனக் கேட்பவர் போல் பார்த்தார்.

இக்கதையின் மூலம் வெளிப்படுவது இரண்டு அம்சங்கள். ஒன்று, சிந்தனைக் கோணம்; மற்றொன்று, புத்திக்கூர்மை. இந்த இரண்டும் இணைந்துதான் சமயோசிதம். ●





# வாயுத் தொல்லை வராமல் தடுக்கலாம்!

உணவு விஷயத்தில் கட்டுப்பாடாக இல்லாதவர்கள், வாயுத் தொல்லை என்ற பிரச்னையைக் கடந்து வராமல் இருக்க முடியாது! அதிலும் இன்றைய சூழ்நிலையில் நிறைய பேருக்கு இந்தப் பிரச்னை பெரும் சவாலாக இருக்கிறது. காரணம், உணவுமுறை மற்றும் வாழ்க்கைமுறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள்தான்.

நாம் உண்ணும் உணவில் இருக்கும் மாவுச்சத்து, நார்ச்சத்து எல்லாம் முழுமையாக உறிஞ்சப்படாமல், உணவு சரியாக ஜீரணம் ஆகாமல் சமயங்களில் பெருங்குடலில் தள்ளப்படுகிறது. அப்போது அங்கு பாக்டீரியாக்கள் அதிகமாக உற்பத்தியாகி, அந்த உணவு புளித்துப் போகிறது. இதனாலேயே வாயு உருவாகிறது.

சிலர் அவசரமாகச் சாப்பிடும்போது உணவோடு நிறைய காற்றையும் சேர்த்து விழுங்கிவிடுவார்கள். அந்தக் காற்று இரைப்பையில் சேர்ந்து வாயுவாக வெளியாகும். குறிப்பாகப் பெண்களுக்கு வாயுத் தொல்லை பெரும் அவஸ்தை. ஒவ்வொருமுறை மாதவிலக்கு ஏற்படும்போதும், அதற்கு முன்பாக பல பெண்கள் வாயுத் தொல்லையால் பாதிக்கப்படுவார்கள். உடலில் திரவச் சமநிலை மாறுபாடு ஏற்படுவதால் இது நிகழ்கிறது.

சாதாரணமான சூழலில் வாயுத் தொல்லை என்பது பெரிய பிரச்னையே இல்லை. ஒருநாளைக்கு ஆறு முதல் 20 முறை வரை வாயு பிரிவது நார்மல்தான். ஆனால் அதிகமான ஏப்பம், வயிறு உப்பிக்கொள்வது, வயிற்று வலி, வயிற்றில் பொருமல், புரட்டல் என இயல்பான வேலைகளைச் செய்ய முடியாதபடி உங்களை இது முடக்கிப்போட்டால், நீங்கள் பிரச்னையில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

வாயுத் தொல்லைக்கு என்ன காரணம்? எப்படித் தடுப்பது? எப்போது டாக்டரிடம் போக வேண்டும்?

## எதனால் வருகிறது?

- சுண்டல் வகைகள், பீன்ஸ், முளைக் கட்டிய பயிறு ஆகியவை வாயுத் தொல்லை தரும்.
- சோடாவோ, செயற்கை குளிர்பானங்களோ குடித்தால் வாயுத் தொல்லை நீங்கி, வயிற்று வலி சரியாகும் என்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் கார்பனேட்டட் பானங்கள் அனைத்தும் வாயுத் தொல்லை உண்டாக்குபவை. அதனால்தான் இவற்றைக் குடித்தபின் வயிறு உப்பியது போல் இருக்கிறது.
- மன அழுத்தமும் பதற்றமும் வாயுத் தொல்லைக்குக் காரணம்.
- மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உணவுக் கழிவுகள் எவ்வளவு அதிக நேரம் வயிற்றில் இருக்கின்றனவோ, அவ்வளவு பிரச்னை!
- அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவது, உடலுக்கு ஒவ்வாத உணவுகளைச் சாப்பிடுவது, ஹார்மோன் மாற்றங்கள் போன்றவற்றாலும் வாயுத் தொல்லை வரும்.
- பால், பாலிலிருந்து வரும் உப பொருட்களான சீஸ், பனீர் போன்றவையும் மலச்சிக்கல் ஏற்படுத்தும்

உணவுகள். தயிர் இந்த ஆபத்து இல்லாதது.

- ❖ கிழங்கு வகைகளால் வாயுத்தொல்லை ஏற்படுகிறது எனப் பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால் அது உண்மையில்லை எனப் பல ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. முட்டைக்கோஸ், காலிஃபிளவர், வெங்காயம், பட்டாணி, சோயாபீன்ஸ், துவரை, முள்ளங்கி போன்றவை வாயுத் தொல்லை தரும். பழங்களில் ஆப்பிள் இந்தப் பிரச்னையைத் தரக்கூடியது.
- ❖ கோதுமை, ஓட்ஸ், மக்காச்சோளம், பிரட், பன் போன்றவை ஓரளவுக்கு வாயுத்தொல்லை தரக்கூடியவை.
- ❖ சூயிங் கம் சாப்பிடும்போது, தேவையில்லாத காற்று வாய் வழியாக இரைப்பைக்குச் சென்று வாயுப் பிரச்னையை உண்டாக்குகிறது. எனவே இதைத் தவிர்ப்பது நல்லது. சாக்லெட்டை மெல்லும்போதும் இப்படி நிகழ்கிறது!
- ❖ உடல் குண்டாக இருப்பவர்களுக்கு எப்போதும், பெண்களுக்கு மாதவிடாய் நாட்களிலும் வாயுத்தொல்லை இருக்கும். அல்சர் பிரச்னை, குடலில் நோய்த்தொற்று, உடலில் நீர்ச்சத்து குறைவது, உமிழ்நீர் அதிகமாகச் சுரப்பது ஆகியவையும் வாயுத் தொல்லைக்குக் காரணங்கள்.

## என்ன செய்வது?

❖ உணவை அவசரமாகச் சாப்பிடும்போது, உணவுப் பொருட்கள் இரைப்பைக்கு காற்றையும் தள்ளிக் கொண்டு சென்றுவிடும். பின் வாயுத் தொல்லை ஏற்படும். மெதுவாகச் சாப்பிட்டால், உமிழ்நீர்ச் சுரப்பிகள் உணவுப் பொருட்களைக் கரைத்து, மென்மையாக்கி, எளிதில் செரிமானமடைய வைக்கின்றன. இதனால் வாயுத் தொல்லை தடுக்கப்படும்.



❖ ஏதோ அவசரத்தில் இருக்கும்போதும், மனச்சோர்வோடு இருக்கும்போதும் சாப்பிடக்கூடாது. அளவுக்கு அதிகமாகவும் சாப்பிடக்கூடாது.

❖ ஸ்ட்ரா போட்டு பானங்களைக் குடிக்கக்கூடாது.

❖ அதிக நார்ச்சத்துள்ள உணவுகளைக் குறைக்கலாம். நார்ச்சத்து உணவுகள் செரிமானத்துக்கு உதவினாலும், வாயுத் தொல்லையையும் தருகின்றன.

❖ கொழுப்பு அதிகமுள்ள உணவுகளைக் குறைத்துக்கொள்ளவும். இவை செரிமானத்தைத் தாமதப்படுத்துகின்றன.

❖ நெஞ்சு எரிச்சலுக்குச் சிகிச்சை எடுத்துக்கொள்ளவும்.

❖ உணவு உண்டபின் ஒரே இடத்தில் உட்காராமல், சிறிது தூரம் நடக்க வேண்டும். இதனால் செரிமான மண்டலம் நன்கு இயங்குவதோடு, இரைப்பையில் இருக்கும் கடினமான உணவுப் பொருட்களும் உடைந்து செரிமானமாகிவிடும். வாயுத் தொல்லையும் நீங்கும்.

## வீட்டுச் சிகிச்சை:

❖ இஞ்சி, சீரகம், பூண்டு, பெருங்காயம், சோம்பு ஆகியவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளவும்.

❖ உங்களுக்கு அதிகமாக வாயுத்தொல்லை தரும் உணவு எது என்பதைச் சிலமுறை சாப்பிடுவதிலேயே உணர்ந்துவிடுவீர்கள். அவற்றைத் தவிர்க்கவும்.

❖ சுண்டல் வகைகளை இரண்டு, மூன்று முறை தண்ணீர் மாற்றி ஊற வைத்துவிட்டு, வேக வைத்தால் வாயுத் தொல்லை இருக்காது. கூடவே சிறு துண்டு இஞ்சி சேர்த்து, மேல் தோல் வெடிக்கும் வரை வேக வைத்துச் சாப்பிடவும்.

❖ தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும். இதனால் உடலில் உள்ள கழிவுகள் வெளியேறுவதோடு, இரைப்பையிலிருந்து வாயுவும் வெளியேறிவிடும்.

## எப்போது டாக்டரிடம் போவது?

வாயுத் தொல்லையோடு குமட்டலும் வாந்தியும் சேர்ந்து வருவது, வயிற்றில் நீண்ட நாட்களாக வலி இருப்பது, கடுமையான வயிற்று வலி ஏற்படுவது, வயிற்றுப்போக்கு, மோசமான நெஞ்சு எரிச்சல், திடீரென உடல் எடை குறைவது, மோசமான மலச்சிக்கல், ஜூரம், நெஞ்சு வலி... இதெல்லாம் இருந்தால் அவசியம் சிகிச்சை பெற வேண்டும்! ●



விநோதமான காரணங்களுக்காக இன்சூரன்ஸ் பாலிசி எடுக்கும் பழக்கம் பல வெளிநாடுகளில் உண்டு. வேற்றுக்கிரக மனிதர்களால் கடத்தப்படும் ஆபத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பாலிசி இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருக்கிறது. சுமார் 50 ஆயிரம் பேர் இந்தப் பாலிசி எடுத்திருக்கிறார்கள்.

பனிப்பிரதேசத் துருவக்கரடிகள் வேட்டையாடுவதற்குப் பெரிதாக சிரமப்படுவதில்லை. கும்பலாக இருக்கும் வால்ரஸ்களை நோக்கி ஆக்ரோஷமாகப் பாயும். உயிர்பயத்தில் அவை சிதறி ஓடும்போது ஒன்றிரண்டு வால்ரஸ்கள் அடிபட்டு விழும். அவையே பனிக்கரடிக்கு இரையாகிவிடும்.

கடலில் மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து, அவற்றிலிருந்து ஷூக்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறது அடிடாஸ் நிறுவனம். கடந்த 2017-ம் ஆண்டில் மட்டுமே இப்படி 10 லட்சம் ஷூக்கள் செய்யப்பட்டன.

நவீன சீட் பெல்ட்டைக் கண்டுபிடித்தது வால்வோ நிறுவனம். பயணங்களில் உயிர் காக்கும் மகத்தான கண்டுபிடிப்பு என்பதால், அதற்குக் காப்புரிமை வாங்காமல் எல்லோரும் பயன்படுத்தட்டும் என விட்டுவிட்டனர்.

நியூசிலாந்து தீவுக்கூட்டத்தில் Disappointment Island என்ற பெயரில் ஒரு தீவு இருக்கிறது. மனிதர்கள் வசிக்காத இந்தத் தீவு, சுமார் ஒரு லட்சம் அல்பட்ராஸ் பறவைகளுக்குட் புகலிடமாக இருக்கிறது. கப்பல்கள் திசைமா விபத்துக்குள்ளாகிப் பலர் இங்கு வந்து சிக்குவர். அவர்களுக்கு உதவிகள் ஏதும் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்ததால், இந்தத் தீவுக்கு இப்படிப் பெயர் வந்ததாம்.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டபோது, பார்வையற்ற ஒருவரை ஒரு வழிகாட்டி நாய் 78-வது மாடியிலிருந்து படிகளின் வழியே பத்திரமாகத் தரைக்கு அழைத்து வந்தது. ஒரு மணி நேர இந்தப் பயணத்துக்குப் பிறகு அவர்கள் பத்திரமாக வெளியில் வந்தனர்.

உறைபனி நாடான ரஷ்யாவில் வசிக்கும் பலர், ஐஸ்க்ரீம் தங்களைக் கதகதப்பாக வைத்திருப்பதாக ஆரம்பத்தில் நம்பினர்.

நண்பர்களே இல்லாமல் தனிமையில் வசிப்பது, கிட்டத்தட்ட புகைப்பிடிக்கும் பழக்கத்தைப் போலவே ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகிறது. ரத்தம் உறைவது தொடர்பான புரதங்களை இரண்டுமே சம அளவில் பாதிக்கின்றன என ஹார்வர்டு பல்கலைக்கழக ஆய்வில் கண்டறிந்துள்ளனர்.



சீன விமானிகள்தான் முதன்முதலில் கையால் தம்ஸ் அப் காட்டி மகிழ்ச்சியைப் பகிரும் வழக்கத்தைக் கொண்டுவந்தனர். விமானம் வானை நோக்கி உயரும்போது, தரையில் இருக்கும் கட்டுப்பாட்டு அறையை நோக்கி தம்ஸ் அப் காட்டி அவர்கள் விடைபெறுவார்கள்.

யுரேனஸ் கிரகம் சூரியனைச் சுற்றிவர 84 ஆண்டுகள் எடுத்துக்கொள்கிறது.

ப
அ!




7-ம்

ன்ற
து.
, சுமார்
களுக்குப்
திசைமாறி
வந்து
கள்
ம்
ங்கு
.

ஆப்பிரிக்க நாடான மௌரிடானியாவில் 2007-ம் ஆண்டுவரை அடிமைத்தனம் வழக்கத்தில் இருந்தது. இப்போதும் அங்கு 4% மக்கள் அடிமைகளாக வாழ்கிறார்கள்.

உலகிலேயே மிக நீண்ட காலம் நட்புறவுடன் இருக்கும் நாடுகள், இங்கிலாந்தும் போர்ச்சுகல்லும்தான். 1386-ம் ஆண்டு தொடங்கி இந்த நட்பு நீடிக்கிறது.

உலகின் மிகப் பழமையான, இன்னமும் புழக்கத்தில் இருக்கும் கரன்சி, பிரிட்டிஷ் பவுண்டு, 1,200 ஆண்டுகளைத் தாண்டி பிரிட்டிஷ் பேரரசின் அடையாளமாக இது தொடர்கிறது.



டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில், அவை உலகின் எல்லாக் கண்டங்களிலும் வசித்தன. ஆம், அன்டார்க்டிகாவிலும் டைனோசர்கள் இருந்தன.

பிறக்கும் குழந்தை அதீத சத்தங்களுக்கும், விழுந்து விடுவோமோ என்ற உணர்வுக்கும் மட்டுமே பயப்படுகிறது. மற்ற எல்லாப் பயங்களும் வளரும்போதே வந்து சேர்கின்றன.


புல் என்று சாதாரணமாகச் சொல்லிவிடுகிறோம். அதில்கூட 6,000 வகைகள் இருக்கின்றன.



அமெரிக்காவின் தெற்கு டகோடா மாகாணத்தில் 14 வயதில் பெற்றோரின் ஒப்புதலுடன் ஒருவர் டிரைவிங் பர்மிட் வாங்கிவிட முடியும். 16 வயதில் டிரைவிங் லைசென்ஸ் வாங்கிவிடலாம்.

புகழ்பெற்ற பாரிஸ் ஈஃபிள் டவரில் பூசப்பட்ட பெயின்ட்டின் எடை, கிட்டத்தட்ட 10 யானைகளின் எடைக்குச் சமம். ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை இதற்கு பெயின்ட் அடித்துக்கொண்டே இருக்கிறார்கள்.






பைசா நகர சாய்ந்த கோபுரம், மிருதுவான மண்ணில் கட்டப்பட்டதால்தான் ஒரு பக்கமாகச் சாய்ந்தது. ஆனால், அந்த மிருதுவான மண்பரப்புதான் அதை நான்கு சக்திவாய்ந்த பூகம்பங்களிலிருந்து காப்பாற்றி இருக்கிறது.

கடந்த 92-ம் ஆண்டு 28 ஆயிரம் ரப்பர் வாத்து பொம்மைகளை ஏற்றிவந்த கப்பல் ஒன்று விபத்துக்குள்ளானது. அடுத்த 20 ஆண்டுகளுக்கு உலகம் முழுக்கப் பல நாடுகளின் கரைகளுக்கு அந்தப் பொம்மைகள் மிதந்து வந்தன.

# காயப்படுத்தக்கூடாது!



பள்ளியிலிருந்து தன்னை அழைத்துச் செல்ல அப்பா வந்ததைப் பார்த்து எட்டாங் கிளாஸ் பிரவிணாவுக்கு ஒரே சந்தோஷம். வழக்கமா அம்மாதான் வருவார்கள். அப்பா கைப்பிடித்து அழைத்துச் செல்லும்போதே, "நாம 'ஜுராசிக் பார்க்' படம் பாக்கலாம். டிக்கெட் புக் பண்ணிட்டேன்'' என்றார். பிரவிணா துள்ளிக் குதிக்கிறாள். ''எல்லாரும் படம் பார்த்துட்டாங்க. நாம மட்டும்தான் பாக்கல" என்று பல நாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்தவளுக்கு திடீர் இன்ப அதிர்ச்சி.

வீட்டுக்குப் போய் அவசரமாகக் கிளம்பி, ஆட்டோ பிடித்து தியேட்டருக்குள் போய் மூன்று பேரும் சீட் தேடி உட்கார்ந்தார்கள். அதில்தான் ஒரு சிக்கல். பிரவிணாவுக்கும் அப்பாவுக்கும் அருகருகே இடம் இருக்க, அம்மாவுக்கு மட்டும் சீட் தனியாக பின் வரிசையில் இருந்தது. அம்மா, "பரவால்ல, நான் இங்கேயே வசதியா உட்கார்ந்து பார்க்கறேன்" என்றார்.

படம் தொடங்கி ஐந்து நிமிடங்கள் கழித்து ஒரு குடும்பம் தியேட்டருக்குள் வந்தது. இரண்டு வயதுக் குழந்தையுடன் இளம் அம்மா ஒருவர், அவருடன் 15 வயதுப் பையன் ஒருவன். பிரவிணாவுக்கு பின்பக்கம் அமர்ந்தார்கள்.

உட்கார்ந்த ஐந்து நிமிடங்களில் அந்த இரண்டு வயதுக் குழந்தை திடீரென அழுதது. அந்த இளம் அம்மா சமாதானப்படுத்த, கொஞ்சம் நேரம் அமைதியானது. ஆனால், மறுபடியும் வீல் வீல் என கத்தி அழுதது. பிரவிணாவால் நிம்மதியாகப் படம் பார்க்க முடியவில்லை.

அப்பாவின் காதுக்குள் ரகசியமாக, ''அப்பா, அந்தக் குழந்தைய அமைதியா இருக்கச் சொல்லுங்க" என்றாள். அப்பாவோ,

"நீ அதைக் கவனிக்காதே! படத்த மட்டும் பாரு. வசனம் கேக்குதுல்ல, அப்புறம் என்ன?" என்றார். குழந்தை மீண்டும் அழ, பிரவிணாவுக்கு கோபம் வந்தது. "யாராவது குழந்தைய எடுத்துட்டு வெளிய போங்களேன். என்னால நிம்மதியா படம் பாக்க முடியல" என்று கத்திவிடுகிறாள்.

உடனே அந்தக் குழந்தையின் அம்மா டக்கென்று திரும்பிப் பார்த்து, ''சாரி'' சொல்லிவிட்டுக் குழந்தையுடன் வெளியில் சென்றார். பின்னாலேயே அந்த 15 வயது சிறுவனும் போனான்.

அடுத்த ஐந்து நிமிடங்களில் அவன் உள்ளே வந்து உட்கார, பின்னாலேயே அந்த இளம் அம்மாவும் வந்து உட்கார்ந்து படம் பார்த்தார். அப்போது அவர் கையில் குழந்தை இல்லை. பிரவிணா அதை லேசாகக் கவனித்தாலும், படம் பார்க்கும் ஆர்வத்தில் அதைக் கண்டுகொள்ளவில்லை. இடைவேளையில் அப்பா பாப்கார்ன் வாங்கித் தரும்போதுகூட அவள் வெளியில் போகவில்லை. படம் முடிந்து வெளியில் வரும்போது, "படம் பாக்குற ஆர்வத்துல அம்மாவ கூட நீ தேடல" என்று சொல்லி அம்மா சிரிக்கிறார்.

இரண்டு நாள் கழித்து பிரவிணாவும் அப்பாவும் விளையாடும்போது, "ஏன் அன்னைக்கு தியேட்டர்ல கத்துனே?" என்றார் அப்பா. "அந்த பாப்பா என்னைப் படம் பாக்க விடாம கத்துச்சி" என்றாள் அவள்.

"ஏன் பாப்பா கத்துச்சி?"

''ஏன்னா அந்தப் பாப்பாவுக்கு தியேட்டர் பிடிக்கல!"

''ஏன் தனக்குப் பிடிக்காத தியேட்டருக்குப் பாப்பா வந்துச்சி?"

"ஏன்னா பாப்பாவோட அம்மாவுக்கு சினிமா பாக்க பிடிச்சிருந்துச்சி. அதான் தூக்கிட்டு வந்தாங்க!"

''கைக்குழந்தை இருக்கும்போது அந்த அம்மாவுக்கு ஏன் அவ்வளவு ஆசை? கைல பாப்பா இருக்கும்போது கொஞ்சம் ஆசைய அடக்கிக்கக் கூடாதான்னு தோணுதா பிரவிணா?"

''என்னப்பா நீங்க சொல்றீங்க? அம்மாவா ஆகிட்டா அவுங்களுக்கு சாக்லேட் இனிக்காதா என்ன? அவுங்களுக்கும் டைனோசர் படம் பார்க்க ஆசை இருக்கும்தானே?"

''சரி, ஏன் படம் பார்க்கறதுக்கு அவுங்க தம்பியோட வந்தாங்க. கணவனோட வரல?"

"அவருக்கு ஆபீஸ்ல வேலை இருந்திருக்கும். தம்பியைக் கூட்டிட்டு கஷ்டப்பட்டு வந்திருக்காங்க!"

"அவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கிற அந்த அம்மாவோட உணர்வு புரியாம, நீ தியேட்டர்ல கத்தினது ஏன்?"

பிரவிணா தன் தவறை உணர்ந்து, ''சாரிப்பா! அவுங்கள அப்போ நான் காயப்படுத்திட்டேன்பா'' என்றாள்.

''அவுங்கள நீ காயப்படுத்தினது அப்பாவுக்கு கஷ்டமா இருந்துச்சு. அதுக்கப்புறம், காயப்படுத்தினது கூடத் தெரியாம நீ சினிமா பாக்கும்போது, 'ச்சே, நம்ம பொண்ணு இப்படி இருக்காளேன்னு கொஞ்சம் கஷ்டமா இருந்திச்சி."

"இல்லப்பா, நான் செஞ்சது பெரிய தப்பு. அவுங்ககிட்ட சாரி கேக்கணும். படம் பாக்குற ஆர்வத்துல அப்படி செய்துட்டேன். இனிமே அப்படிச் செய்ய மாட்டேன்" என்று மனப்பூர்வமாகச் சொன்ன பிரவிணா திடீரென்று யோசித்தாள். அப்புறம் கேட்டாள். "அப்பா, ஆனா அந்த அம்மா வெளியில போயிட்டுத் திரும்ப வந்து படம் பாத்தாங்களே. அப்ப அவங்க கையில குழந்தை இல்லையே? எப்படி!"

"நீ கத்தின உடனே அந்த அம்மா தியேட்டர விட்டு வெளிய போனாங்க இல்லையா? அதைப் பார்த்த உன் அம்மா, உடனே பின்னாடியே போயிட்டாங்க. போய் அந்த அம்மாகிட்ட, 'சாரி, கத்தினது என் பொண்ணுதான். உன் குழந்தையை நான் பாத்துக்குறேன். நீ போய் படம் பாரு'ன்னு சொல்லி அவங்களுக்கு நம்பிக்கை கொடுத்து திரும்ப அனுப்பினாங்க. படம் முடியறவரை குழந்தையைப் பார்த்துக்கிட்டாங்க. அதனாலதான் அந்த அம்மா உள்ள வந்து திரும்பவும் படம் பாத்தாங்க. அவுங்க ரொம்ப வருஷம் கழிச்சி அப்பதான் படம் பாக்க வந்தாங்களாம்."

"நம்ம அம்மாவா?"

"ஆமா, உன் அம்மா!"

"அப்போ அம்மா படம் பாக்கலியா?"

அப்போது உள்ளே வந்த அம்மா, "ஆமா, நான் படம் பாக்கல. அதுக்கென்ன? நீ ஸ்கூலுக்குப் போன பிறகு ஒருநாள் நானும் அப்பாவும் போய் பாப்போம்."

"தேங்ஸ்மா, நான் செஞ்சது தப்பு. நீங்க உதவி செஞ்சு அந்த அம்மாவ படம் பாக்க வெச்சீங்களே" என்றாள் பிரவிணா.

''இன்னொரு தடவ இப்படி யாரையும் அவமானப்படுத்தாதே, என்ன! கொஞ்சம் அன்பா யோசிச்சிப் பாரு. அன்பு நம்ம எல்லாத்துகிட்டயும் இருக்கும். அதை எல்லா இடத்துலயும் பேசி வெளிப்படுத்தணும். சில இடத்துல பொறுமை காட்டி வெளிப்படுத்தணும், சரியா?"

"சரிம்மா..."

"நல்ல பிள்ளை" என்று பிரவிணாவுக்கு அம்மா முத்தம் கொடுத்தார்.

**– விஜயபாஸ்கர் விஜய்**

## 75% வருகைப்பதிவு கட்டாயம்!

இந்த ஆண்டு பிளஸ் 2 பொதுத் தேர்வை சுமார் 60 ஆயிரம் மாணவர்கள் எழுதவில்லை என்பது பெரும் சர்ச்சையாக மாறியது. நீண்ட காலமாகப் பள்ளிக்கே வராதவர்களுக்குக்கூட ஹால் டிக்கெட் கொடுத்ததால்தான் இப்படி ஆனதாக கல்வியாளர்கள் குற்றம் சாட்டினர். இந்நிலையில், “இந்த ஆண்டு பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதியவர்கள் கொரோனா காலத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் என்பதால், வருகைப் பதிவுக்கான கட்டுப்பாடின்றி அனைத்து மாணவர்களும் பொதுத்தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். ஆனால், வரும் கல்வி ஆண்டு முதல், பத்தாம் வகுப்பு, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுத 75% வருகைப் பதிவு கட்டாயம்” என்று அறிவித்துள்ளார் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.







## ஆதார் கட்டாயம்!

தமிழகத்தில் பள்ளிக்கல்வித்துறை மாணவர்களின் நலனிற்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதேபோல மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இனி மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெறுவதற்குத் தங்களின் வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணைக் கட்டாயம் இணைக்க வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது. மாணவர்கள் புதிதாக அஞ்சல் வங்கியில் கணக்குத் தொடங்கப் பள்ளிகளில் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட உள்ளன.

## கல்வி நிறுவனங்கள் அருகில் போதை!




தமிழகத்தில் எங்கெங்கு கல்வி நிறுவனங்களின் அருகில் டாஸ்மாக் கடைகள் உள்ளன என சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை கேட்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தாலுகா நற்பவளக்குடி கிராமத்தைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவர் ஒரு வழக்கு தொடுத்தார். ‘எங்கள் கிராமத்தின் அருகில் இருக்கும் டாஸ்மாக் கடை பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. அதை அகற்ற வேண்டும் என்று மனுக்களை அதிகாரிகளிடம் அளித்திருந்தோம். இந்த நிலையில் இந்த டாஸ்மாக் கடையை எங்கள் கிராமத்தின் மையப்பகுதியில் திறக்க ஏற்பாடுகள் நடக்கிறது. அந்த இடத்தின் அருகில் ஐ.டி.ஐ மற்றும் நர்சிங் கல்லூரி உள்ளது’ என்று முறையிட்டிருந்தார்.




இதை விசாரித்த நீதிபதிகள், “கல்வி நிறுவனங்களுக்கு அருகில் டாஸ்மாக் கடையை நடத்தினால் மாணவர்கள் எப்படி கெட்டுப்போகாமல் இருப்பார்கள்? மதுபானக் கடை அமைப்பது அரசின் கொள்கை முடிவாக இருக்கலாம். ஆனால் அதை உள்ளூர் மக்கள் எதிர்க்கும்போது இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட நேரிடுகிறது” என்று கூறி அந்த டாஸ்மாக் கடை செயல்படத் தடை விதித்தனர். பின்னர், “வேறு இடங்களிலும் கல்வி நிறுவனங்களின் அருகே இதுபோன்ற நிலை உள்ளதா என்பது குறித்து அதிகாரிகள் பதிலளிக்க வேண்டும்” என்று உத்தரவிட்டனர்.




## அனைவருக்கும் ஐ.ஐ.டி.எம்!

இந்தியாவில் செயல்படும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் முதன்மையானது சென்னை ஐஐடி. கிராமப்புற அரசுப் பள்ளி மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் ஐஐடி போன்ற உயர்கல்வி நிறுவனத்தில் சேரும் கனவை விதைக்கும் முயற்சியாக உருவாக்கப்பட்ட திட்டம் ‘அனைவருக்கும் ஐஐடிஎம்’. இதன்மூலம் சென்னை ஐஐடி வாயிலாக 250 அரசு மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 500 அறிவியல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அவர்கள் வாயிலாக 1 லட்சம் மாணவர்களுக்குக் கற்பித்தல் நடத்தப்படும். இதற்குப் பயன்தரும் வகையில் மின்னணு செய்முறைப் பெட்டகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பள்ளிகளுக்கு வழங்கினார்.

இதன் ஒரு பகுதியாக, 10–ம் வகுப்பு படிக்கும் 500 மாணவர்கள், 500 மாணவிகள் என 1,000 பேருக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறிவுத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். இவர்களுக்கு ஐஐடி உள்ளிட்ட முன்னணி கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு வழிகாட்டுதல் வழங்கப்படும். இவர்கள் 12–ம் வகுப்பை நிறைவு செய்யும் வகையில் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 வழங்கப்படும். அதன்பின் இளநிலை மற்றும் முதுநிலை கல்லூரிப் படிப்பைத் தொடரும்போதும் மாதந்தோறும் 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. ‘கல்வி சமமாகக் கிடைத்தால்தான், அவர்களுக்கு அனைத்துமே சமமாகக் கிடைக்கும்’ என்ற இலக்குடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

AGARAM FOUNDATION அறம் செய விரும்பு **யாதும்** நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## சந்தாதாரர் ஆகுங்கள்!

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | | |
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

**டிக் செய்யவும்**

☐ **ஓர் ஆண்டு ரூ.240**

☐ **இரண்டு ஆண்டுகள் ரூ.450**

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



# தவறாகப் பிரதிபலிக்கும் வரலாறு!



வரலாற்றை நமக்குப் பிடித்த மாதிரி புரிந்துகொண்டு படைப்புகளை உருவாக்குவது எப்படிப்பட்ட மாபெரும் பிழை என்பதைக் கலைஞர்கள் உணர வேண்டும். கலைஞர்கள் என்றில்லை, நம்மில் யாராயினும் வரலாற்றை நமக்குப் பிடித்தது போலக் கற்பனை செய்யவே விருப்பப்படுவோம். நாம் நேசிக்கும் மனிதர்களை மாவீரர்களாகவும், தோற்கடிக்கவே முடியாதவர்களாகவும் கற்பனை செய்துகொள்வோம். நிஜ வாழ்வில் நாம் நினைக்கும் அறங்கள் அனைத்தும் வரலாற்றிலும் நிகழ்ந்திருக்க வேண்டும் என ஆசைப்படுவோம்.

ஆனால், நம் கற்பனைகளும் நிஜமும் வேறு வேறானவை! உகாண்டா சர்வாதிகாரி இடி அமீனைப் பற்றிச் சிறுவயதில் படித்தேன். மக்களை அவர் கொடுமைப்படுத்தியதைப் பற்றிப் பல்வேறு விஷயங்களைப் படித்தபோது, நிச்சயமாக இந்த ஆளின் முதுமைக் காலம் கொடுமையானதாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால், இடி அமீன் தன் முதுமைக் காலத்தில் பிற நாடுகளில் தஞ்சமடைந்து சொகுசாகவே வாழ்ந்து இறந்தார் என்பதை அறிந்தபோது எரிச்சலாய் இருந்தது. வரலாறு பிடிக்காவிட்டாலும் அதுதான் உண்மை என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதாய் ஆனது.

ஐரோப்பா வரைபடத்தில் துருக்கிக்கு மேலே இருக்கும் கருங்கடலைக் கூர்ந்து பார்த்தால் இரண்டு கரங்களாகப் பிரிந்திருக்கும். அதில் இடக்கரம் ஓரம் கீழே இருக்கும் நகரம்தான் கான்ஸ்டான்டினோபில். அது பழங்கால பைசாண்டினிய பேரரசின் தலைநகராக இருந்தது. அந்தப் பேரரசை ஆண்ட மன்னன்தான் முதலாம் ஜஸ்டின். அவன் முழுப்பெயர் ஜஸ்டினியன் என்றாலும் ஜஸ்டின் என்றே அழைக்கப் பெற்றான். அவனது ஆட்சிக் காலம் கி.பி. 527 – 565. அதாவது ராஜராஜ சோழன் ஆட்சிக்கு 500 வருடங்கள் முன்பு!

பேரரசன் ஜஸ்டினின் தளபதியாக இருந்தவன் பெலிசாரியஸ். அவன் தன் பதின்வயதுப் பருவத்திலேயே பைசாண்டினிய படையில் சேர்ந்து, தன் திறமையால் படைத்தளபதியாகி முதலாம் ஜஸ்டினுக்குத் துணையாக இருந்தான். ரோம், இத்தாலி போன்ற நாடுகள்மீது படையெடுத்துச் சென்று சிலவற்றில் வென்றான். சிலவற்றில் தோல்வியுற்றான். பெலிசாரியஸ் தோற்றாலும் அதற்காக அவனை மன்னன் கோபித்துக்கொள்ளவில்லை. திரும்பத் திரும்ப பெலிசாரியஸைப் புகழ்ந்து ஊக்கப்படுத்தினான். மன்னன் ஜஸ்டினின் இந்த நம்பிக்கை பெலிசாரியஸை இன்னும் இன்னும் விசுவாசமாக்கியது.



முதலாம் ஜஸ்டின் மக்கள் மீது மிகக் கொடுமையான வரியைத் திணித்தான். அதைக் கட்டாயப்படுத்தி வசூலித்தான். வரி செலுத்தாதவர்களைக் கொடுமைப்படுத்தினான். இதனால் மக்கள் முதலாம் ஜஸ்டின் மீது வெறுப்பாக இருந்ததார்கள்.

முதலாம் ஜஸ்டின் ஒரு தேர்ப்போட்டி நடத்தினான். போட்டி நடந்து கொண்டிருக்கும்போது ஒற்றர்கள் வந்து, நாட்டுக்கு எதிராகச் செயல்பட்டதாகப் பல பெயர்களை மன்னனிடம் சொன்னார்கள். அதில் இருவர் அந்தத் தேர்ப்போட்டியில் கலந்துகொண்ட பிரபல விளையாட்டு வீரர்கள். மன்னன் உடனே தேர்ப்போட்டியைப் பாதியில் நிறுத்தி, அந்த வீரர்களைத் தேசத்துரோகக் குற்றத்துக்காக மக்கள் முன்னால் கொன்று போட்டான்.

ஏற்கனவே மன்னன் மீது எரிச்சலில் இருந்த மக்கள், தங்களுக்குப் பிடித்தமான விளையாட்டு வீரர்களை மன்னனின் படைகள் கொன்று போடுவதைப் பார்த்து வெறியாகிப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். Nika riots என்று வரலாற்றில் பெயர் பெற்ற மிகப்பெரிய கலவரம் நடக்கிறது. மன்னனால் அதைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. மக்கள் எழுச்சி கொண்டு அரண்மனையைச் சூழ்ந்தார்கள். மாட மாளிகைக்கு எல்லாம் தீ வைத்தார்கள்.

முதலாம் ஜஸ்டின் நாம் அவ்வளவுதான் என்று நினைத்து ரகசிய வழி வழியே தப்பித்துப் போக நினைக்கும்போது அவன் மனைவி தடுக்கிறாள். “நீங்கள் இப்போது தப்பித்துச் சென்றால் உயிர் வேண்டுமானால் பிழைக்கலாம். ஆனால் வரலாற்றில் மதிப்பில்லாமல் போவீர்கள்” என்று எச்சரிக்கிறாள். மன்னன் அரண்மனையிலேயே தங்கி தன் கடைசி நம்பிக்கையாகத் தளபதி பெலிசாரியஸை அழைத்தான். “என்ன வேண்டுமானாலும் செய்துகொள். ஆனால் நாட்டையும் என்னையும் காப்பாற்று” என்று கோரிக்கை விடுக்கிறான்.

மன்னன் தன் மேல் வைத்திருக்கும் விசுவாசம் கண்டு பெலிசாரியஸ் பூரிக்கிறான், சிலிர்க்கிறான். கலவரத்தை அடக்க களத்தில் படையோடு இறங்குகிறான். முப்பதாயிரத்துக்கும் அதிகமான மக்களை நான்கு நாட்களில் கொன்று குவித்து கலவரத்தை அடக்குகிறான். அரண்மனையும் முதலாம் ஜஸ்டினின் மன்னர் பதவியும் பிழைக்கிறது. தளபதி பெலிசாரியஸ் மீது ஜஸ்டினுக்கு அதிக பாசம் ஏற்படுகிறது.

அதன்பின் பெலிசாரியஸ் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று படைத்தளபதிக்கு மாபெரும் அதிகாரம் கொடுக்கிறான். இயல்பிலேயே போர் ஆர்வம் கொண்ட பெலிசாரியஸ் வட ஆப்பிரிக்கா, ஜெர்மனியப் பிரதேசங்கள் என்று பல இடங்களுக்குச் சென்று போர் செய்து பைசாண்டினியப் பேரரசை விரிவு செய்கிறான்.

பல வருடங்களுக்குப் பிறகு வெற்றி வீரனாக நாடு திரும்புகிறான். மக்கள் பெலிசாரியஸையே அரசன் போலப் போற்றினார்கள். இது பற்றி முதலாம் ஜஸ்டின் எரிச்சலுற்றாலும் பெலிசாரியஸை ஒன்றும் செய்யவில்லை. பாசத்துடனே நடத்தினான்.

பிறகு பெலிசாரியஸ் மேல் ஊழல் குற்றச்சாட்டு வருகிறது. அதன் காரணமாக பெலிசாரியஸை மன்னன் கைது செய்து, சிறு தண்டனை கொடுத்து விடுதலை செய்தும் விடுகிறான். அதன்பின் பெலிசாரியஸ் வயதாகி இயல்பாக இறந்தான் என்றும், கான்ஸ்டான்டினோபில் நகரத்தை விட்டே சென்றுவிட்டான் என்றும்தான் வரலாற்றில் இருக்கிறது.

ஆனால் மக்களிடையே பெலிசாரியஸ் பற்றிப் பல்வேறு கதைகள் ஓடின. பெலிசாரியஸ் மேல் மன்னன் எரிச்சலாகி அவன் கண்களைப் பிடுங்கிக் கண்ணில்லாமல் ஆக்கித் தெருவில் விட்டான் என்றும், பெலிசாரியஸ் தன் முதுமைக் காலத்தில் பார்வையற்றவனாகத் தெருவில் வருவோர் போவோரிடம் பிச்சை எடுத்ததாகவும் கதை கட்டினர்.

இந்தக் கதை வழிவழியே ஊதிப் பெருக்கப்பட்டு, 18–ம் நூற்றாண்டை அடைந்தது. அப்போதிருந்த ஐரோப்பிய ஓவியர்கள் பலரை, இந்த பெலிசாரியஸ் கதை ஈர்த்திருக்கிறது. நான்கு நாட்களில் முப்பதாயிரம் பேரைக் கொன்ற ஒரு வீரன், பிற்காலத்தில் கண்ணில்லாமல் பிச்சை எடுத்து கஷ்டப்பட்டான் என்பது ஓவியர்களுக்குப் பிடித்த அறமாக இருந்திருக்கிறது.

அந்த ஈர்ப்பின் காரணமாகவே பெலிசாரியஸ் கண்ணில்லாமல் பிச்சை எடுப்பதாகப் பல ஓவியங்களை வரைந்தார்கள். அந்த ஓவியங்கள் மக்கள் மத்தியில் பிரபலமாகி, பின் அதுவே சரித்திரமாகவும் ஆகிவிட்டது. கலைஞர்கள் வரலாற்றை வரலாறாக, நடந்ததை நடந்தபடிப் பார்க்காமல், அவர்களுக்குப் பிடித்தாற்போலப் பார்த்தபோது வரலாறு மாறிவிடுகிறது. உண்மை என்பது திரிக்கப்பட்டு விடுகிறது.

அதற்கொரு உதாரணம்தான் படைத்தளபதி பெலிசாரியஸின் இந்த ஓவியமாகும்.

**– விஜயபாஸ்கர் விஜய்**



# சிவப்புப் பறவை

1880–களின் அமெரிக்கா. மண்ணின் மைந்தர்களான சிவப்பிந்திய மக்களைக் கூட்டம் கூட்டமாக 'ரிசர்வ்' என்று சொல்லப்படும் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வெள்ளையர் கூட்டம் அடிமைப்படுத்தியிருந்த காலம். கிறிஸ்தவ மிஷனரிகள் ஒரு பக்கமும் ஐரோப்பிய காலனியாதிக்க அரசு மறுபக்கமும் செவ்விந்தியர்களை 'நாகரிகமானவர்களாக' மாற்ற பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருந்தனர். 1819–ம் ஆண்டு இந்திய பண்படுத்தல் சட்டம் (Indian Civilization Act) அமெரிக்க காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டது. செவ்விந்திய இனக் குழுக்களை 'அழிவிலிருந்து' காப்பாற்ற, உண்டு உறைவிடப் பள்ளிகளை நாடு முழுவதும் திறப்பது என்றும், அவற்றில் செவ்விந்தியக் குழந்தைகளைச் சேர்த்து அவர்களுக்கு நாகரிகம், கல்வி உள்ளிட்டவற்றைச் சொல்லித்தந்து 'தங்களைப் போல' உருவாக்க வேண்டும் என்பதே இந்தச் சட்டத்தின் நோக்கம்.

அமெரிக்க மிஷனரிகள் தங்கள் பணிகளை 1820–களில் தொடங்கின. மண்ணின் மைந்தர்களான அமெரிக்கர்கள் இயற்கையை வழிபட்டவர்கள். அவர்களது வழிபாட்டு முறைகளில் இருந்து கிறிஸ்தவத்தின்பால் திருப்புவதுதான் அடிப்படையில் மிஷனரிகளின் பணியாக இருந்தது. இளம் அமெரிக்கக் குழந்தைகளைத் தங்கள் பள்ளிகளில் சேர்த்து கிறிஸ்தவ மறை போதித்து அவர்களைப் 'பண்படுத்த' பலவிதங்களில் முயன்றனர். தொடர்ச்சியாக 'ரிசர்வேஷன்' எனப்படும் செவ்விந்திய வாழிடங்களுக்குச் சென்று அம்மக்களிடம் தங்களைப் போல அவர்கள் குழந்தைகளை 'மாற்ற முடியும்' எனப் பேசினர்.

ஆனால், பண்பாட்டின் வேர்களைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டிருந்த செவ்விந்தியப் பெண்களை அதிலிருந்து அசைத்துப் பார்ப்பதே பெரும் சிக்கலாக இருந்தது. 'பொய் சொல்லும் வெள்ளையர்களைக்' கண்டால் தப்பி ஓடிவிடுமாறு தங்கள் பெண் குழந்தைகளுக்கு அவர்கள் அறிவுறுத்தினர். ஐரோப்பியர்களைக் கண்டால் காடுகளுக்குள் ஓடி, மரங்களில்ஏறிபெண்குழந்தைகள்தப்பித்துக்கொள்வர். இதைச் சமாளிக்க மிஷனரிகள் செய்த தந்திரம் – மிட்டாய்கள், கனிகள். தங்களிடம் வரும் குழந்தைகளுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இனிப்பான அருமையான உணவை இந்த உறைவிடப் பள்ளிகள் அளித்தன. வெள்ளிக்கிழமைகளன்று மட்டும் பள்ளிகளில் அமெரிக்கக் குழந்தைகள் கூட்டம் நிறைந்து வழிந்தது. 1884–ம் ஆண்டு இப்படியான கதை ஒன்றைக் கேட்டுத்தான் தெற்கு டகோடா பகுதியின் யாங்க்டன் இந்தியக் குடியிருப்பைச் சேர்ந்த எட்டு வயது சிறுமி ஸித்கலா–சா, மிஷன் பள்ளிக்குச் செல்ல விரும்பினாள்.

ஸித்கலா 22 பிப்ரவரி 1876 அன்று பிரெஞ்சு தந்தைக்கும் அமெரிக்கத் தாய்க்கும் மகளாகப் பிறந்தார். குழந்தை பிறந்த சில மாதங்களில் தந்தை ஃபெல்கர் குடும்பத்தைக் கைவிட்டுக் காணாமல் போனார். பழங்குடியினப் பெண்களுக்கு இது வழக்கமாக நேர்வதுதான். மகளைத் தனியே வளர்த்தெடுக்க முயன்றார் அம்மா. செவ்விந்தியக் கடவுள்கள் அவளுக்கு அறிமுகம் செய்யப்பட்டன. தங்கள் வீட்டுப் பெண் குழந்தைகளுக்குத் தாய் உள்ளிட்ட நெருங்கிய உறவினரான செவ்விந்தியப் பெண்கள் குழுவாகச் சேர்ந்து கற்பிப்பது இயல்பு. அதிலிருந்து தன் மகள் விலகாமல் இருக்க வேண்டும் என ஸித்கலாவின் தாய் ஆசைப்பட்டார். ஆனால் குழந்தை ஸித்கலா பள்ளிக்குச் செல்ல ஆசைப்பட்டாள். அங்கு அவளை அழைத்துச் செல்ல வண்டியும் வந்தது. 'போகாதே மகளே…' அழுது அரற்றினாள் தாய், பயனில்லை.

24 சொல்லப்படாத வரலாறு

பள்ளிகளுக்கு வந்த சிறாருக்கு அதிக கண்டிப்பு இருந்தது, அவர்களது ஆடை, பண்பாடு, இசை, கலை என அனைத்தையும் மறக்கடிக்கும் முயற்சி பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டது. ஸித்கலா–சாவுக்கு பள்ளியில் ஜெர்ட்ரூட் சிம்மன்ஸ் பானின் எனப் ‘பெயரிடப்பட்டது’. பள்ளிகளில் சேரும் பெண் குழந்தைகளுக்குக் கட்டாயமாகத் தலைமுடி அகற்றப்பட்டது. அந்த அனுபவம் ஸித்கலாவுக்கு பெரும் ரணமாக மாறியதை அவர் பதிவு செய்கிறார். ‘திறமையற்ற போர் வீரர்கள் தோற்றுப்போனபின் அவர்களைக் கைப்பற்றிய வீரர்கள் அவர்களது தலையை மொட்டையடித்து முடியை அகற்றுவார்கள் என அம்மா எனக்குச் சொல்லியிருந்தார். எங்கள் மக்களிடையே துக்கத்தில் இருந்தவர்களும் கோழைகளும்தான் தலையை மழித்திருப்பார்கள்’ என தங்கள் பண்பாடு பற்றி எழுதுகிறார் ஸித்கலா.

1887–ம் ஆண்டு ஸித்கலாவுக்கு உடல்நலக் கோளாறு ஏற்பட, தன் தாயிடம் திரும்பினார். ஆனால் இப்போது அவருக்கு சொந்த ஊர், வீடு, மக்கள் என அனைத்தும் அந்நியமாகத் தெரிந்தன. அவரது சிறுவயது தோழர்கள் அவரிடமிருந்து விலகி நின்றார்கள். உறவுக்காரக் குழந்தைகள் வளர்ந்துவிட்டிருந்தனர். பள்ளி ஆடைகளைக் களைந்து சிவப்பிந்திய ஆடை, செருப்பு அணிந்திருந்த ஸித்கலாவை தங்கள் விருந்துகளில் கலந்துகொள்ள வேண்டுமெனில், அவர்களைப் போலவே வெளிர்நிற கவுன், ரிப்பன் சகிதம் வந்தால் அனுமதிப்பதாக நவீன கல்வியறிவு பெற்ற செவ்விந்தியர்கள் சொன்னார்கள். நான்கு கோடைகள் டகோடாவில் சுற்றித் திரிந்தவர், மேற்படிப்பு படிப்பதே தனக்கான வழி என்பதை உணர்ந்தார். குறிப்பாக வெள்ளையரின் இசை. வயலின், பியானோ.


மீண்டும் கல்விச்சாலைக்கு வந்தார் ஸித்கலா. அடுத்த மூன்றாண்டு படிப்பின் இறுதியில் பட்டயம் பெற்றார். இண்டியானாவின் எர்ல்ஹாம் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்த ஸித்கலா 1895–ம் ஆண்டு ‘பாலின சமத்துவம்’ குறித்துக் கல்லூரியில் உரை நிகழ்த்தினார். 1896–ம் ஆண்டு கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் side by side என்ற உரையை நிகழ்த்தி இரண்டாம் பரிசு வென்றார்.



அமெரிக்க இந்தியர்களின் சிக்கல்கள், அவர்களது அடையாள அழித்தொழிப்பு, தங்களை அவர்கள் பண்பாட்டு மீட்டுருவாக்கம் செய்வது எப்படி எனத் தங்கள் கடவுளர்களான இத்கொமி, ஸ்பியுஸ் (Itkomi, Spioux) கொண்டே கதைகளாக அவர் பேசியது பெரும் எழுச்சியைச் சிவப்பிந்திய மாணவர்களிடையே ஏற்படுத்தியது. இவர்களில் தன்னை இத்கொமியாகவே ஸித்கலா உருவகம் செய்துகொண்டிருந்தார். எழுத்திலும் பேச்சிலும் இசையிலும் தன்னைச் செதுக்கிக்கொண்டார் ஸித்கலா. அவரது தன்வரலாற்றுக் குறிப்புகளை Impressions of an Indian Childhood, The Schooldays of an Indian Girl, AN Indian Teacher என மூன்று நூல்களாக எழுதினார். கல்வியைப் பெற சிவப்பிந்தியக் குழந்தைகள் எவ்வளவு துயரங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது என்பதை அவரது நூல்கள் தெளிவாக்குகின்றன.

அவருக்கு கார்லைல் பள்ளியில் வேலை கிடைத்தது. செவ்விந்திய உலகம், வெள்ளையர் உலகம் இரண்டுக்கும் இடையே ஊசலாடிக்கொண்டிருக்கும் புதிதாக மிஷன் கல்வி பெற்று அல்லலுறும் செவ்விந்தியர்களின் நிலையை The Soft Hearted Sioux கதையில் வெளிப்படுத்தினார். கார்லைல் பள்ளியில் இருந்து இந்தக் கட்டுரையை எழுதியதற்காக ஸித்கலா வெளியேற்றப்பட்டார். தன் மக்களிடமே மீண்டும் சென்றார்.

தன் இனக்குழுவின் முதிய மக்களிடம் கதைகள் கேட்டுத் தொகுக்கத் தொடங்கினார். உலகின் அத்தனைச் செவ்வியல் மொழிகளுக்கும் தொன்மைப் பண்பாடுகளுக்கும் வாய்மொழிக் கதைகள் உண்டு. அவற்றின் முக்கியத்துவம் நாம் கற்பனையிலும் அளவிட முடியாதது. இந்தக் கதைகளை எல்லாம் தொகுத்து 1901–ம் ஆண்டு Old Indian Legends என்ற நூலாக வெளியிட்டார் ஸித்கலா. செவ்விந்தியர்களின் பண்பாட்டையும் ஆற்றொழுக்கான அவர்களின் இயற்கையுடன் இயைந்த வாழ்வியலையும் இந்நூல் ஐரோப்பியருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. முதல் முறையாகச் செவ்விந்தியர் வாழ்க்கையை வெளியுலகுக்குச் சொன்ன நூல் இதுவே. ஜெர்ட்ரூட் சிம்மன்ஸ் என அதுவரை வழங்கப்பட்டுவந்த ஸித்கலா, தன் பெயரைச் சிவப்புப் பறவை எனத் தன்



தாய்மொழியில் பொருள்படும் 'ஸித்கலா – சா' என மாற்றிக்கொண்டார்.

ஸ்டாண்டிங் ராக் இந்திய ரிசர்வேஷனின் எழுத்தர் பணி அவருக்குக் கிடைத்தது. இங்கு பணியாற்றும்போது அறிமுகமானவர், அவரது கணவர் ரேமண்ட் டெலெபாஸ் பொனின். ஐரோப்பியச் செவ்விந்தியரான ரேமண்ட், ஸித்கலா பிறந்து வளர்ந்த யாங்க்டன் ரிசர்வேஷன் பகுதியைச் சேர்ந்தவர். திருமணம் முடிந்த கையுடன் கணவன் மனைவி இருவரும் உடா பகுதியிலுள்ள செவ்விந்தியர் வசிப்பிடத்துக்கு இடம்பெயர்ந்தனர். அங்கு ரேமண்டுக்கு எழுத்தர் பணி கிடைத்தது. அடுத்த 14 ஆண்டுகள் உடாவில் இருவரும் வசித்தனர். அவர்களின் ஒரே மகள் ரேமண்ட் இங்கு பிறந்தார்.

பின் கணவருடன் வாஷிங்டனுக்குக் குடிபெயர்ந்த ஸித்கலா, செவ்விந்தியர்களை அரசியல்படுத்த முனைந்தார். இந்தக் காலக்கட்டத்தில் அவர் எழுதிய கதைகளின் தொகுப்பு 1921–ம் ஆண்டு 'அமெரிக்க இந்தியக் கதைகள்' என்ற பெயரில் வெளியாயின. அவர் அமெரிக்க இந்தியர்கள் சங்கத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதன்பின் அவர் ஆற்றிய பணி மிகப்பெரியது. கிறிஸ்தவ நெறிப்படி வழுவாமல் தங்கள் இன வழக்கப்படி வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்த செவ்விந்தியக் குழந்தைகளுக்குத் தொடர் கல்வியும் பாதுகாப்பும் கிடைக்க ஏற்பாடு செய்தார். இவரைப் போலச் சில முன்னணிக் களப் போராளிகளால் 1924–ம் ஆண்டு மண்ணின் மைந்தரான செவ்விந்தியக் குடிகளுக்கு முழு உரிமைகளுடனான அமெரிக்கக் குடியுரிமை கிடைத்தது.

1926–ம் ஆண்டு ஸித்கலாவும் அவர் கணவரும் இணைந்து தேசிய அமெரிக்க இந்தியர்கள் சங்கத்தைத் (National Council of American Indians) தோற்றுவித்தனர். இறக்கும்வரை இவ்வமைப்பின் தலைவராக இருந்து அதை ஸித்கலா வழிநடத்தினார். அரசியல் அதிகாரம் கேட்டுப் போராடிய ஒரே செவ்விந்தியக் குழு என்ற பெயரை ஸித்கலா ஏற்படுத்திய NCAI பெற்றது.

26 ஜனவரி 1938 அன்று தன் 61–வது வயதில் ஸித்கலா – சா மரணமடைந்தார். தன் கடைசி மூச்சுள்ள மட்டும் இந்திய அமெரிக்க மக்களின் உரிமைகளுக்காகப் போராடிவந்தார். அவர்களுக்கு நல்ல கல்வி, மருத்துவ வசதிகள், சம உரிமை, வாக்குரிமை எனப் பல களங்களில் அவர் முன்னெடுத்த போராட்டம் இன்று அதற்கான பலன் ஈந்திருக்கிறது.

'அவன் சண்டையிட்டால் என்ன? அவனது காடுகள் அழிக்கப்பட்டன; அவனது வேட்டை விலங்குகள் காடுகளிலிருந்து விரட்டப்பட்டன; அவனது மீன்பிடி அவனிடமிருந்து களவாடப்பட்டது. அவனுக்கு அவன் குடும்பம் மிகவும் பிடிக்கும்; அவன் அதை எப்படியாகிலும் காப்பான். அவனது நன்னிலத்துக்கு அவனே உரிமையாளன். அவனது மூதாதையர் நல்கிய நிலம், அதிலிருந்த புனிதக் காடுகள், பண்பாட்டை விலைமதிப்பற்ற தன் சொத்தாக அவன் எண்ணினான். அவன் மண்ணை அவன் நேசித்தான். அவன் வழிபட்ட கோயில்களில் இருந்து அவனை விரட்டியடித்த பின் நெஞ்சில் வஞ்சம் சுமந்தபடி அவன் வாழ்நாள் எல்லாம் திரிய வேண்டுமா? ஒளிமறைந்த காடுகளில் அவன் ஒளிந்திருந்து அழிக்கப்பட்ட தன் வீட்டுக்காக பழிவாங்க வேண்டுமா? ஆங்கிலேய உள்ளங்களுக்கு மட்டுமே தேசப்பற்று உரித்தானதா? அவனது மாபெரும் எதிரியை வெறுங்கையாய் எதிர்கொண்டு ஒளிந்து ஒடுங்கி அமர்ந்திருக்கும் அவன்மேல் கருணை கிடையாதா?'

**– நிவேதிதா லூயிஸ்**

# மறக்கவேண்டிய முன்மாதிரிகள்!



சில விஷயங்களைத் தெரிந்துகொண்டு பின்பற்றுவதும் கற்றல்தான். எதையெல்லாம் பின்பற்றக்கூடாது என்பதை அறிவதும் கற்றல்தான். அப்படி மறக்க வேண்டிய முன்மாதிரிகளாகச் சிலரைப் பார்க்கலாம்.

ஒரு கம்ப்யூட்டர் விற்பனை நிறுவனத்தில் புதிதாகப் பணிக்குச் சேர்ந்த விற்பனைப் பிரதிநிதிக்குப் பெரிய குழப்பம். "மற்ற எல்லோரும் விற்பதைவிட மிகக் குறைந்த விலைக்கு நாம் கம்ப்யூட்டர் விற்கிறோம். இது எப்படி நமக்குக் கட்டுப்படியாகும்?" என்று கேட்டான். "இந்த கம்ப்யூட்டர்கள் சீக்கிரமே பழுதாகிவிடும். அதைச் சரிசெய்யும் கான்ட்ராக்டையும் நாம்தான் எடுத்திருக்கிறோம். அதற்கு அதிகக் கட்டணம் வசூலித்து, நஷ்டத்தை ஈடு செய்துவிடுவோம். இது பிசினஸ் தந்திரம்" என்றார் நிர்வாகி. மிக ஆபத்தான பிசினஸ் தந்திரம்!

புதிதாக வாங்கிய மூக்குக் கண்ணாடியைத் திருப்பிக் கொடுக்க வந்தார் ஒரு பெண்மணி. "ஏன் மேடம், பவர் தப்பா இருக்குதா? போட்டால் தலை வலிக்குதா?" என்று குழப்பத்துடன் கேட்டார் கடைக்காரர்.

''இல்லை, இதை என் கணவருக்காக வாங்கினேன். இதைப் போட்ட பிறகும் அவர் எந்த விஷயத்தையும் நான் பார்க்கிற கோணத்தில் பார்க்க மாட்டேன் என்கிறார்" என அந்தப் பெண்மணி புகார் சொன்னார். என்ன செய்வது? மனதின் பவரை சரிசெய்யும் கண்ணாடி கண்டுபிடிக்கப்படவில்லை!

பல் டாக்டரிடம் சிகிச்சைக்கு வந்தார் ஒருவர். அவருக்கு சொத்தைப் பல்லைப் பிடுங்குவதற்கான சிகிச்சை தர வேண்டியிருந்தது. அதற்கான மயக்க மருந்து தருவதற்கு முன்பாக அவரிடம் ஒப்புதல் படிவத்தில் கையெழுத்து வாங்கினார் நர்ஸ்.

பொடி சைஸ் எழுத்துகளில் ஒரு பக்கம் முழுக்க இருந்த நிபந்தனைகளைப் படிக்கச் சிரமப்பட்ட நோயாளி, "என்னங்க இது? தப்பான பல்லை டாக்டர் பிடுங்கிட்டாலும் நான் சண்டை போடக் கூடாதுன்னு என்கிட்ட கையெழுத்து வாங்கிக்கறீங்களா?'' என்று நகைச்சுவையாகக் கேட்டார். நர்ஸ் சிரிக்காமல், "அது மட்டும் இல்லை, அப்படி தப்பான பல்லைப் பிடுங்கிட்டாலும், அதுக்கும் நீங்க ஃபீஸ் கொடுக்கணும். அதுக்கும் சேர்த்துதான் இந்தக் கையெழுத்து" என்றார். மருந்து கொடுக்காமலே, நோயாளி மயக்கமாகிவிட்டார்.


எதற்குமே உதவாமல் மணிக்கணக்கில் நீளும் மீட்டிங்குகள் கார்ப்பரேட் அலுவலகங்களில் சகஜம். ஒரு முதலாளி இப்படி மீட்டிங்குகளில் நீண்ட நேரம் நடக்கும் விவாதங்களைத் தடுப்பதற்காக ஒரு உத்தியைக் கையாண்டார். மீட்டிங்கில் அவரே முதல் பேசி, "இதுதான் நான் எடுத்திருக்கும் முடிவு. இந்த முடிவில் விருப்பம் இல்லாதவர்கள், இந்த அறையை விட்டு மட்டுமில்லை... ஆபீஸை விட்டே போய்விடலாம்" என்பார். உடனே எல்லோருமே அந்த முடிவை ஏற்க, சில நிமிடங்களில் மீட்டிங் முடிந்துவிடும்.

நல்ல யோசனைதான். ஆனால், விவாதம் செய்து புதிய யோசனைகளை உருவாக்கும் வாய்ப்புகளே அங்கு கிடைக்காமல் போய்விடுமே! ●



## நம்மோடு நடக்கும் விலங்கு!

2009–ம் ஆண்டில் மனித இனத்தின் தொன்மை உயிரியின் எச்சத்தைக் கண்டுபிடித்தார்கள். ஆர்டிபிதிகஸ் ராமிடஸ் (Ardipithecus ramidus) எனப்படும் இந்த விலங்கைச் செல்லமாகச் சுருக்கி ‘ஆர்டி’ என்று அழைக்கிறார்கள். 44 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதக்குரங்கின (hominid) வகை சார்ந்தது இந்த உயிரி. வாலில்லாக் குரங்குக்கும் (chimpanzee) மனிதனுக்கும் பொதுவான மூதாதைய இனமாக ஆர்டி இருந்திருக்கும் எனக் கருதுகிறார்கள். பொதுவாகவே பாலூட்டி விலங்குகள் நான்கு காலில்தான் நடக்கும். குரங்கு போன்ற சில விலங்குகள் பின்னங்கால்களில் நிற்கும் என்றாலும், சிறு தொலைவு மட்டுமே இரண்டு கால்களில் நடக்கும். இன்று நவீன மனிதன் மட்டுமே இரண்டு கால்களில் நடக்கும் விலங்கு. வியப்பாக 44 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்த ஆர்டி உயிரி, இரண்டு காலில் நடக்கும் தன்மையுடன் இருந்தது எனவும், முதல் இரண்டு கால் மனிதக்குரங்கின உயிரி இதுவே எனவும் அறியப்பட்டுள்ளது.



## குஞ்சா... இரையா?


ஒரு பிரசவத்தில், ஆண் கடற்குதிரை 1,000 முதல் 2,000 கடற்குதிரைகள் வரை ஈன்றெடுக்கும். பிரசவித்த களைப்பில் வேட்டையாட முடியாது என்பதால், அடுத்த சில மணி நேரங்களுக்கு அது உணவு எதுவும் உண்பதில்லை. ‘அடடா... பாவம்!’ என்று உச்சுக் கொட்டுவதற்கு முன்பு ஒரு நிமிடம் கேட்டுவிடுங்கள். பிரசவித்த குஞ்சுகளில் எதாவது அந்த நேரம் பக்கத்தில் வந்தால், எளிதாக இரை கிடைக்கிறதே என்று சொந்தக் குழந்தையையே விழுங்கவும் ஆண் மீன்கள் தயங்குவதில்லை! இதைக் காட்டுமிராண்டித்தனம் என்று சொல்லி முகம் சுளித்துவிட முடியாது. அது நம் மதிப்பீடு. ஆண் கடற்குதிரைகளைப் பொறுத்தவரை, அருகில் வரும் குஞ்சுகள் எளிதில் கிடைக்கும் இரைகள். அவ்வளவே!

## குயில் செய்யும் காரியத்தைப் பாருங்கள்!

முட்டையிலிருந்து ஒரு பறவைக் குஞ்சு வெளிவந்திருக்கிறது. வந்த உடனே அது செய்யும் முதல் வேலை, கூட்டிலிருக்கும் மற்ற முட்டைகளைக் கீழே தள்ளி உடைப்பதுதான். உணவைச் சேகரித்துக்கொண்டு திரும்பி வரும் பறவைப் பெற்றோர்கள், இது ஏதோ தற்செயல் என்று நினைத்துக்கொண்டு அந்தக் குஞ்சுக்கு உணவூட்டுவார்கள். அதுவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும். நன்றாக வளர்ந்து நிற்கும்போதுதான் தெரியும், அது அந்தப் பறவையினமே அல்ல... வேறு ஏதோ ஊடுருவி அது. தன் குழந்தை என்று நினைத்து வேறு எதையோ அந்தப் பறவைகள் இத்தனைக் காலம் வளர்த்திருக்கின்றன.


## ராணியைக் காக்கும் மகளிர் ஆர்மி!

ராணித்தேனீயின் உடலெங்கும் மினுங்கும் பொன்னிற முடிகள் உண்டு... ராணி இல்லையா?! ராணித்தேனீக்கு கொடுக்கு உண்டு. ஆனால், அதை அது எதிரி ராணிகளுடன் போரிடும்போது மட்டுமே பயன்படுத்தும். மற்ற பிரச்னைகளிலிருந்து ராணியைக் காக்கவேண்டுமானால் அதற்கு வேலைக்காரத் தேனீக்களின் மகளிர் ஆர்மிதான் வரவேண்டும்!



## ஒரு முட்டையும் ஒரு தகப்பனும்!

மே அல்லது ஜூன் மாதத்தில் பெண் பறவை பெங்குவின் ஒரே ஒரு முட்டையை இடும். அடுத்த நொடி முட்டையை ஆணிடம் தந்துவிட்டு தாய்ப்பறவை வேட்டைக்குச் சென்றுவிடும்! அடுத்த இரண்டு மாதங்கள் முட்டையைக் காப்பாற்றுவது தந்தையின் வேலை. துருவத்தில் பனிக்காலம் உச்சத்தில் இருக்கும் நேரம் என்பதால் சராசரி வெப்பநிலை மைனஸ் நாற்பது டிகிரி செல்சியஸ் வரை இறங்கும். பனிப்புயலின்போது காற்றின் வேகம் மணிக்கு 200 கிலோமீட்டர் வரை இருக்கும். அப்பாக்கள் எல்லாம் ஆளுக்கு ஒரு முட்டையை வைத்துக்கொண்டு பனிக்காலத்தை எதிர்கொள்ளத் தயாராகின்றன.



கண்ணீர் மல்கச் செய்யும் தமிழ் சென்டிமென்ட் திரைப்படத்தின் முக்கியமான கதைத் திருப்பத்தைப் போல இருக்கும் இது, இன்றுவரை விஞ்ஞானிகளைக் குழப்பிவரும் ஒருவகை ஒட்டுண்ணிப் பண்பு. இதன்பெயர் குஞ்சு ஒட்டுண்ணித்தனம் (Brood Parasitism). அதாவது, தன் குழந்தையைப் பாதுகாத்து வளர்த்தெடுக்கும் பொறுப்பை வேறு ஓர் இனத்திடம் விட்டுவிடுவது, அந்தப் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்வது.

‘காக்கையின் கூட்டில் தன் முட்டைகளைக் குயில் இட்டுவிடும்’ என்று படித்திருப்போம். குயில் கிட்டத்தட்ட 100 பறவை இனங்களின் கூடுகளில் முட்டையிடும் இயல்பு உடையது. பெரும்பாலும் குயில் குஞ்சுகள்தான் முட்டையிலிருந்து முதலில் வெளிவரும். வந்த உடனே அங்குள்ள மற்ற முட்டைகளை உடைத்துவிடும். தன் பிழைப்பை உறுதிசெய்துகொள்ளும். ஒன்றல்ல இரண்டல்ல, 100 பறவை இனங்களுக்கு இந்தப் பண்பு உண்டு.







## கோமாளி மீன்களின் குடும்பம்!

கோமாளி மீன் (Clown fish) என்பது, பவளத்திட்டுக்களில் வசிக்கும் ஒருவகை கடல் மீன். கோமாளி மீன்களுக்கும் கடல் சாமந்திகளுக்குமிடையே பிரிக்கவே முடியாத ஒரு பிணைப்பு உண்டு. கடல் சாமந்திகள் இல்லாமல் கோமாளி மீன்களால் வசிக்க முடியாது. கடல் சாமந்திகளின் உடலில் உள்ள நச்சுப் பொருள் காரணமாக, வேட்டை மீன்கள் கடல் சாமந்திகளுக்கு அருகில் வருவதில்லை. இதனால் கோமாளி மீன்கள் பாதுகாக்கப்படுகின்றன.

கோமாளி மீன்கள் கூட்டமாக வசிக்கும். ஒரு தலைமைப் பெண் மீன், ஒரு தலைமை ஆண் மீன், சிறிய ஆண் மீன்கள் பல கொண்ட கூட்டம் இது. பெண் மீன்களே பெரிதாக இருக்கும்.



## பள்ளிகளில் விதை தேடல்!

இந்த ஆண்டு அகரம் விதை தேர்வுப் பணியைச் சற்று மாறுபட்ட விதமாக நடத்துகிறோம். கடந்த 13 ஆண்டுகளில் விண்ணப்பங்கள் வராத பள்ளிகளை அடையாளம் கண்டு, 18 மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு நேரில் சென்று விதைத் திட்டம் பற்றியும் உயர்கல்வி பற்றியும் விழிப்புணர்வு கொடுத்து, மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அப்படி 609 அரசுப் பள்ளிகளுக்கு நமது உள்ளூர் தன்னார்வலர்கள் உதவியுடன் சென்றோம். இதில் நமது தன்னார்வலர்கள், அகரம் முன்னாள் மாணவர்கள் என 55 பேர் பங்கு பெற்றார்கள்.






## கோவையில் திறன் பயிற்சி!

கோவை பகுதி கல்லூரிகளில் பயிலும் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு விதை மாணவர்களுக்கு ஒரு நாள் பயிற்சிப் பட்டறை 26.03.2023 அன்று கே.பி.ஆர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. மாணவர்கள் மனரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி திருமிகு. ஸ்ரீலக்ஷ்மி பேசினார். சமூகத்திற்கான மனிதர்களாகத் தங்களை எப்படி உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பது பற்றி நம்மாழ்வார் ஐயா அவர்களின் வழியில் வந்த திரு. குமார் பேசினார். 90 மாணவர்கள் பங்கு பெற்றார்கள். இதைத் தொடர்ந்து தன்னார்வலர்களுக்கான மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது. அதில் இந்த வருடம் விதைத் தேர்வுப் பணியை எப்படி நடத்தலாம் என உரையாடல் நடைபெற்றது.





## அகரம் கலைக்குழுவின் மகளிர் தின விழா!

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் 08 அன்று அகரம் மாணவியர் விடுதியில் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நடனம், பாடல், கவிதை என மாணவியர்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். கூடவே, நமது கலைக்குழுவினர் 'நீ ஆண், நீ பெண்' என்ற நாடகத்தை நடத்தினார்கள். ஆண் பெண் சமத்துவத்தை உணர்த்தும் வகையில் இது இருந்தது. உலக உழைக்கும் மகளிர் தின விழாவை முன்னிட்டு மார்ச் 11 அன்று OCFWU/ AIDEF அமைப்பு நடத்திய நிகழ்ச்சியில் நமது கலைக்குழுவினர் இதே நாடகத்தை அரங்கேற்ற வாய்ப்பு கிடைத்தது. இந்த நிகழ்ச்சியில் 200–க்கும் மேற்பட்டவர்கள் பார்வையாளராகக் கலந்துகொண்டனர். மாணவர்களுக்கு இது புது அனுபவத்தைக் கொடுத்தது.



## உளவியல் ஆலோசனை!

அகரம் விதை மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும், அவர்களின் சுய தேடல் மற்றும் புரிதலை மேம்படுத்துவதற்கும் உளவியல் ஆலோசனை கொடுக்கப்படும். இதை திருமிகு. சரஸ் பாஸ்கர் மற்றும் அவர்களின் குழுவினர் கடந்த 2017 முதல் வழங்கி வருகின்றனர். முதலில் ஒவ்வொரு மாணவ, மாணவியரின் மனநிலை எப்படி உள்ளது என்பதைப் பொதுவாக ஒரு சோதனை வைத்து ஆலோசகர்கள் தெரிந்துகொள்வர். 2022–ம் ஆண்டு அகரம் விதைத் திட்டத்தில் தேர்வாகி சென்னை கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இந்த உளவியல் ஆலோசனை 19.03.2023 அன்று சென்னையிலுள்ள ம.பொ.சி இல்லத்தில் திருமிகு. சரஸ் பாஸ்கர் அவர்களின் குழுவினரால் நடத்தப்பட்டது.

# உதறித் தள்ளி உயர்ந்து செல்லுங்கள்!



சீறிப் பாய்ந்த சில நிமிடங்களில் பல ஆயிரம் கிலோமீட்டர் கடந்து விண்வெளியை அடைகிறது ராக்கெட். மனிதன் உருவாக்கிய பொருட்களில் அதிவேகமாகப் பயணிப்பது அதுதான். ராக்கெட்டின் வேக ரகசியம் என்ன தெரியுமா? காலியாகும் எரிபொருள் கலன்களை ஒவ்வொரு கட்டத்திலும் கழற்றி விட்டுவிட்டுப் போகிறது அது. தேவையற்ற சுமைகளை உதறித் தள்ளுவதால்தான் அது முன்னேறிச் செல்கிறது.

'வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், தேவையற்ற அனைத்தையும் உதறித் தள்ளப் பழகினால்தான் முன்னேற முடியும்' என்பதை ராக்கெட் நமக்கு உணர்த்துகிறது. எவற்றையெல்லாம் நாம் உதற வேண்டும்?

❖ உங்களைப் பற்றிய அடுத்தவர்களின் கணிப்புகளை உதறித் தள்ளுங்கள். நீங்கள் யார் என்பதை அவை தீர்மானிக்காது. 'உங்களுக்கு எது சிறந்தது' என்பதை முடிவெடுக்க உங்களுக்குத் தெரியும்.

❖ கடந்த காலத் தோல்விகளை நினைத்து அவமானம் அடைவதை உதறித் தள்ளுங்கள். நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மட்டுமே மனம் பார்க்கட்டும்.

❖ 'எனக்கு என்ன வேண்டும்' என முடிவெடுக்காமல் இருக்கும் மனநிலையை உதறித் தள்ளுங்கள். இலக்கு என்ன என்பதைத் தீர்மானிக்காத எவரும் வாழ்வில் மேலே செல்ல முடியாது.

❖ சோம்பலை உதறித் தள்ளுங்கள். உங்கள் முன் இரண்டு வாய்ப்புகள் இருக்கின்றன. ஒன்று, தற்போதைய சூழலை ஏற்றுக்கொள்வது. இரண்டு, அதை மாற்றி அமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வது. இரண்டாவது வாய்ப்பை சுறுசுறுப்புடன் ஏற்றுக்கொள்ளுங்கள்.

❖ எதுவும் செய்யாமல் சும்மா இருக்கும் பழக்கத்தை உதறித் தள்ளுங்கள். ஒவ்வொரு புதிய நாளிலும் பல முடிவுகளை எடுக்கும் வாய்ப்பு உங்கள் எதிரே இருக்கிறது. அதை உணர்ந்துகொள்ளுங்கள்.

❖ எதையும் செய்யும்போது 'இது தப்பாகிவிட்டால் இழப்பு ஏற்படுமே' என்ற அச்சத்தை உதறித் தள்ளுங்கள். நிறைய புதிய முயற்சிகளைச் செய்யும்போது, சில விஷயங்கள் இப்படி ஆகலாம். ஆனால், அவை பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்.

❖ தீர்க்க வேண்டிய பிரச்னைகளிலிருந்து விலகி ஓடும் வழக்கத்தை உதறித் தள்ளுங்கள். அவற்றை எதிர்கொண்டு மீண்டு வரும்போது உங்கள் மனஉறுதி அதிகமாகும்.


❖ எந்தச் சூழலிலும் முக்கியமான முடிவுகளை எடுக்காமல் தள்ளிப்போடும் பழக்கத்தை உதறித் தள்ளுங்கள். சரியான நேரத்தில் சரியான முடிவுகள் எடுக்காததுதான் பல இழப்புகளுக்குக் காரணம்.

❖ வாழ்வில் நிகழும் நல்ல விஷயங்களைக் கண்டுகொள்ளாமல், மோசமான விஷயங்களையே பார்த்து வருந்தும் மனநிலையை உதறித் தள்ளுங்கள். நல்ல விஷயங்களுக்காக நன்றி உணர்வுடன் இருக்கும்போதுதான், நிறைய நன்மைகள் நடக்கும்.


❖ ஒவ்வொரு நிமிடத்தையும் ரசித்து வாழாமல், எதிர்காலக் கனவுகளில் மட்டுமே மூழ்கியிருக்கும் பழக்கத்தை உதறித் தள்ளுங்கள். சின்னச் சின்ன சந்தோஷங்கள்தான் வாழ்வை முழுமையாக்கும். அந்த மகிழ்ச்சியை இழக்காமல் கனவு காணுங்கள். ●



Owned, Published by T.J. GNANAVEL, 10/55, Raju Street, West Mambalam, Chennai - 600 033 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


திருக்குறள் 100
வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்
சிவகுமார்

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050.
Postal Registration No. TN/CC(S)DN/612/22-24.
WPP License No - TN/PMG(CCR)/WPP 665/2022-2024 Date of Publication 1st week of every month.
Posted at Egmore RMS (Patrika Channel) Posted on 5th to 11th of every month.



**நிழல்தரும் ஒவ்வொரு மரமும்
கோடையைக் குளிர்விக்கும் இயற்கை கொடை
மரங்களை வளர்த்தால் கோடைக் காலத்திலும்
இந்த மண் குளிரும்... நம் மனமும் குளிரும்.**




மதிப்பிற்குரியவர்களுக்கு...

RAMRAJ ©

காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in

கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்

Follow us RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia


If undelivered
please return to

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801